DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வேகம் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1475 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 12, 2024

# "கனடியத் தமிழர்களின் கனவான 'தமிழ்ச் சமூக மையம்' நிஜமாக எழுந்து நிற்பதற்கு, எமது மக்களின் பங்களிப்பு இன்னும் அதிகளவு தேவைப்படுகின்றது"

## தமிழ்ச் சமூக மைய நிதிச் சேகரிப்புக் குழுவின் சார்பில் உறுப்பினர்கள் வேண்டுகோள்



"கனடியத் தமிழர்களின் கனவான "தமிழ்ச் சமூக மையம்" நிஜமாக எழுந்து நிற்பதற்கு, எமது மக்களின் பங்களிப்பு இன்னும் அதிகளவு தேவைப்படுகின்றது. கனடாவின் மத்திய அரசு மற்றும் ஒன்றாரியோ மாகாண அரசு ஆகியவை வழங்கிய நிதி ஒதுக்கீடுகள் மற்றும் எமது சமூக உறுப்பினர்களின் மத்தியிலிருந்து நாம் திரட்டிய நிதி அனைத்தையும் தவிர்த்து எமக்கு 25 மில்லியன் டாலர்கள் தேவைப்படுகின்றது. அதைப் பெற்றுக்கொள்வதற்கு எமது தமிழ்ச் சமூகத்தின் 2500 குடும்பங்களிடமிருந்து தலா 10000 டாலர்களைத் திரட்டி அந்த தொகையை ஈடுசெய்து கொள்ளலாம் என்று நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

ஆனால் அந்த முயற்சி ஆமை வேகத்தில் தான் செல்கின்றது. எனவே எமது கனடா வாழ் தமிழ் மக்கள் எமது முயற்சிக்கு பச்சைக் கொடி காட்ட வேண்டும்."

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# தனிப்பட்ட பயணமொன்றில் கனடா வந்துள்ள வவுனியாவைச் சேர்ந்த வெற்றிகரமான தொழிலதிபர் திருமதி கோகிலாதேவி அசோக்குமார்



வட இலங்கையைச் சேர்ந்த வெற்றிகரமான தமிழ் பேசும் பெண் தொழில்முனைவோர்களில் ஒருவரான திருமதி கோகிலாதேவி அசோகுமாரை உங்கள் அனைவருக்கும் அறிமுகப்படுத்த விரும்புகின்றோம் திருமதி அசோகுமார் வவுனியா கோபிதன் கார்மென்ட்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் உரிமையாளரும் ஆவார்.

சாதாரண உடைகள் முதல் நேர்த்தியான பெண்கள் அணியும் உடைகள் மற்றும் நாகரீகமான மேற்சட்டைகள் வரை பெண்களுக்கான ஆடைகளை தயாரிப்பதில் 23 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்தைப் பெற்றுள்ளார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8


Thamil Isai Kalaamanram of Ontario
Presents
Isai Vizha 2024
Commences with a Homage to Saint Thiyagaraja
A 2-DAY EVENT
July 13 & 14, 2024
From 9:30am. to 8:00pm.
We will have music concerts throughout the two days
Admission is free for all
All musicians, rasikas and music lovers are cordially invited.
Tamil Arts Auditorium
3-1120 Tapscott Road,
Scarborough, Ontario M1X 1E8
Phone: 416-724-2466 www.thamilisai.org


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்
ஊட்டும் கரங்கள்
தமிழும் இசையும்
இராப்போசன விருந்தும்
இன்பத் தமிழ்ப் பேச்சு
சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும் நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர், சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை
பர்வின் சுல்தானா
நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்
Zee தமிழ் சரிகமப புகழ்
கோபாலகிருஷ்ணன்
கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்
இன்னிசை மாலை
அன்பளிப்பு
$150 VIP
$100
70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்க்கு மட்டும் $75
யூலை 28, 2024
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)
தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

# உதயன் கதிரோட்டம்

Canada — We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## நம் தாய் மண்ணில் …

### பாமர மக்களின் வாழ்க்கைக்கு வறுமை தடையாக!… கற்றவர்கள் கடமைகளை மீறுகின்றார்கள்!… அரச அதிகாரிகள் அதிகார துஸ்பிரயோகம் செய்கின்றார்கள்!

இவ்வாரத்தில் உலகெங்கிலும் இருந்து எமக்கு கிடைத்துள்ள பல செய்திகள் மற்றும் தகவல்களைப் படிக்கும் உள்ளம் பூரிப்படைவதிலும் பார்க்க மனது தளர்கின்றது. பதட்டம் அதிகரிக்கின்றது.

கனடாவில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் கனடியத் தமிழ் மக்களுக்காக ‘தமிழச் சமூக மையம்’ ஒன்றை நிறுவுவதற்கான பணிகளில் ஐம்பதுக்கும் மேற்படி தமிழ் அன்பர்கள் தங்கள் நேரத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தி இயங்கிவருகின்றார்கள். பெருமளவு நிதியைச் சேகரிப்பதற்காக திட்டங்கள் தீட்டி சுமார் 25 மில்லியன் கனடிய டாலர்களை திரட்டுவதற்கான பணிகளை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர்.

ஆனால் இலங்கை என்னும் மாங்கனித் தீவில் வடக்கிலும் தெற்கிலும் குழப்ப நிலைதான். தனது வாழ்வின் இறுதிவரை தென்னிலங்கை அரசியல்வாதிகளோடு முரண்படாமலும் பாதிக்கப்பட்ட மக்களை பார்க்கசுவும் பிடிக்காமலும், தமிழரசுக் கட்சி என்ற நீண்ட கால அரசியல் கட்சியை காப்பாற்ற முடியாதவராய் இயற்கை மரணத்தைத் தழுவிய இரா. சம்பந்தரின் இறுதிக் கிரியைகளை அரசாங்கத்தின் செலவில் செய்வதற்காக கொழும்புத் தலைமை தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. நான்கு திசைகளிலிருந்தும் அரச உத்தரவுகள் பறந்த வண்ணம் உள்ளன. தங்கள் நன்றிக் கடனைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி அலுவலகம் முதல் பிரதமர் அலுவலகம் வரை சிரத்தை எடுத்து சம்பந்தர் அவர்களை வழியனுப்பி வைக்கக் காத்திருக்கின்றார்கள்.

மறுபக்கத்தில் ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைத்து, அந்தப் பதவியின் மூலம் தனக்கு கிடைக்கும் அதிகாரத்தையும் ஆடம்பர வாழ்க்கையையும் தொடர நினைத்து திட்டங்கள் தீட்டும் ரணில் விக்கிரமசிங்கவின் ‘ஆசை’ நிறைவேறுவதற்கு பக்க பலமாக நின்று செயற்படும் அவரது தமிழ்-சிங்கள- இஸ்லாமிய ‘சகாக்கள்’ தங்களுக்கு கிட்ட வேண்டிய சன்மானங்களுக்காகவும் காத்திருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

அதற்கும் மேலான துயரம் தரும் செய்திகள் நம் தமிழர் தாயகமான வடக்கில் அரங்கேறியுள்ளன. பணம் மீது கொண்ட வெளியினால் எமது சமூகத்தில் கற்றவர்கள் அல்லது உயர்ந்தவர்கள் என்று மதிக்கப்படும் வைத்தியர்களும் சட்டத்தரணிகளும் ‘துணிந்து’ செய்யும் அநியாயங்களும் அராஜகங்களும் அரங்கேறிய வண்ணம் அங்கு ‘அசிங்கமான’ சம்பங்கள் இடம்பெற்றுவருகின்றன. பாமர மக்கள் படித்தவர் என்று மதிக்கும் கூட்டம் பணத்திற்காக சண்டை போடுவதை அங்கு சாதாரண மக்கள் ஓரமாய் நின்று பார்த்து வியந்தும் சிரித்தும் வீதிகளைக் கடக்கின்றார்கள். வைத்தியப் பெருந்தகைகள் ‘சிறு சண்டியர்கள்’ போல தாக்குதல்களை நடத்தும் அளவிற்கு அங்கு சம்பாத்தியம் தொடர்பான போட்டிகள் தோன்றியுள்ளன என்பது தெளிவாகின்றது.

இறுதியாக இதயத்தை தாக்கும் இன்னும் ஒரு செய்தி. யாழ்ப்பாண நகரத்திலிருந்து வடக்கில் அமைந்துள்ள இடத்தில் இயங்கிவரும் பெண்கள் காப்பகம் ஒன்றில் விசமிகளின் செயலால் பாதிக்கப்பட்டுள்ள அந்த பெண்களுக்கான காப்பகத்தை உடனடியாக மூடும் வண்ணம் உத்தரவு இட்டுள்ள மற்றுமொரு பெண் அதிகாரியான வடக்கு மாகாணத்தின் ஆளுனர் அவர்கள் அந்த காப்பகத்தில் உள்ள இளம் பெண்களை அரசாங்கம் பொறுப்பெடுத்து அந்தச் அபலைப் பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டவல்லை நடவடிக்கைகளை எடுப்பதாக இன்னும் எமக்கு செய்தி ஒன்றும் வந்து சேரவில்லையே?

இவ்வாறான பல துன்பியல் நாடகங்கள் எழுந்து நின்று தாண்டவமாடும் நமது தமிழ் மண்ணை நாம் எவ்வாறு அழைப்பது இனிமேல்?

## தனிப்பட்ட பயணமொன்றில் கனடா வந்துள்ள வவுனியாவைச் சேர்ந்த வெற்றிகரமான தொழிலதிபர் திருமதி கோகிலாதேவி அசோக்குமார்

(முன் பக்கத் தொடர்ச்சி)

**WCIC** இன் 2009 ஆம் ஆண்டின் சிறந்த பெண் தொழில்முனைவோர் விருது, சிறந்த மற்றும் முன்மாதிரியான சாதனைகளுக்கான வடக்கு தொழில்முனைவோர் விருது 2016 மற்றும் இலங்கையின் மகளிர் அமைச்சினால் வழங்கப்பெற்ற அதிகாரமளிக்கும் பெண்கள் விருதுகள் 2023 போன்ற விருதுகள் உட்பட அவரது சாதனைகளுக்காக குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. , வடக்கு மாகாணம். 2004 ஆம் ஆண்டு முதல், அவர் 10 க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளார்,

கோபிதன் ஆடைகள் தயாரிக்கும் நிறுவனம் கடந்த இரண்டு தசாப்தங்களாக 60,000 கொள்வனவு செய்பவர்களைக் கொண்ட வாடிக்கையாளர் தளத்தைக் கட்டியெழுப்பியுள்ளது மற்றும் 48 மில்லியன் இலங்கை ரூபாயில் வருடாந்த மொத்த வருமானம் (200,000 கனடிய டாலர்கள்) ஐ எட்டியுள்ளது.

மேலும், இலங்கைப் நடைபெற்ற போர் மற்றும் கோவிட்-19 எமக்களித்தசவால்களுக்கு மத்தியில், திருமதி அசோகுமார் தனது வணிகத்தை நிர்வகிப்பதில் விடாமுயற்சியுடன் இருந்தார். திருமதி அசோகுமார் தற்போது கனடாவுக்குச் வந்து இங்குள்ள துடிப்பான வாழ்க்கையை நேரில் காண விரும்புகின்றார்.

கனடாவில் உள்ள பல்கலாச்சார அமைப்பைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதிலும், கனடாவில் உள்ள தமிழ் கனடியர்களின் ஆற்றல்மிக்க வணிக மேம்பாடுகள்/முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதிலும் அவர் மிகவும் ஆர்வமாக உள்ளார்.

கனடாவில் பிரபல தொழிலதிபரான .கணேசன் சுகுமார் அவர்களை ஸ்காபரோவில் உள்ள அவரது வர்த்தக நிலையத்தில் கடந்த 9ம் திகதி செவ்வாயன்று சந்தித்தோம். திருமதி கோகிலாதேவி அசோகுமாரைச் சந்தித்து வணிக விடயங்களைப் பற்றி கலந்துரையாடியதில் திரு கணேசன் சுகுமார் மிகவும் உற்சாகமும் பெருமிதமும் அடைந்தார். . அவர்களுடன், திரு.பாஸ்கரன் சின்னத்துரை-(வீடு விற்பனை முகவர்) , திருமதி நந்தினி கிருபா, அஜாக்ஸ், ஸ்பைஸ்லேண்ட் உணவகம், மற்றும் ஜஸ்டின் பால், ஒரு வானொலி அறிவிப்பாளர் மற்றும் ஆகியோர் இந்தப் புகைப்படங்களில் காணப்படுகின்றார்கள்.




## வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள சங்குஸ்தாபன விழாவிற்காக வந்துள்ள சிவாகமவித்வான் மாயவரம் ரவிசுவாமிநாத சிவாச்சாரியார்



கனடா- ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று 12ம் திகதி வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் நடைபெறவுள்ள சங்குஸ்தாபன விழாவிற்கு சிறப்பு சிவாச்சாரியாக கலந்து கொள்ளும் முகமாக வருகை தந்துள்ள சிவாகமவித்வான் மாயவரம் ரவிசுவாமிநாத சிவாச்சாரியார் அவர்கள் கனடா -ரொறன்ரோ விமானநிலையத்தில் நேற்று வந்திறங்கினார்.

விமான நிலையத்தில் அவரை வரவேற்கச் சென்ற பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் தலைமையிலான ஆலயத்தின் பிரதிநிதிகள் அவரை வரவேற்பதை படங்களில் காணலாம்.

**ஒரு சோடிக் குத்துவிளக்குகள் விற்பனைக்குண்டு**

வீடுகளில் காட்சிப் பொருளாகவும் பாவிக்கக் கூடிய அழகிய ஒரு சோடிக் குத்துவிளக்குகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. விலையை பேசித்தீர்க்கலாம். தொடர்புகளுக்கு :- 647 339 4019

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வெளிநாட்டு வேலைக்குச் சென்று நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துபவர்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படுவார்கள் என்கிறார். இலங்கை அமைச்சர் மனுஷ நாணயக்கார

கனகராசா சரவணன்



இஸ்ரேலுக்கு முதல்கட்டமாக அனுப்பிய பணிக் குழுக்களின் நெருக்கடிகள் காரணமாக, இஸ்ரேலிய விவசாயத் துறையில் வேலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இலங்கையில் போன்று எம்மவர்களின் சிலர் அங்கு போராட்டம் நடத்தியதால் இவ்விளைவு ஏட்பட்டது எனவே இஸ்ரேல் சென்று முறைகேடாக நடப்பவர்களை நாட்டிற்கு திரும்ப அழைத்து அவர்கள் மீண்டும் வெளிநாட்டிற்கு செல்ல முடியாவாறு கருப்புபட்டியலில் இணைக்கப்படும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இஸ்ரேலில் விவசாயத் துறையில் பணிக்குச் செல்லும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு விமானச் சீட்டு வழங்கும் நிகழ்வு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் தொழில் மாற்றட்டும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர்கூடத்தில் செவ்வாய்க்கிழமை (9) நடைபெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முதல்கட்டமாக இஸ்ரேலுக்கு அனுப்பிய பணிக் குழுக்களின் நெருக்கடிகள் காரணமாக, இலங்கையில் போன்று எம்மவர்களின் சிலர் அங்கு போராட்டம் நடத்தியதால் இஸ்ரேலிய விவசாயத் துறையில் வேலைகள் வீழ்ச்சியடைந்துள்ளது.

எனவே நாம் தொடர்ந்தும் இஸ்ரேலிய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தியதன் மூலம் எங்களுக்கு மீண்டும் விவசாயத் துறையில் பணியாளர்களை அனுப்ப வாய்ப்பு கிடைத்துள்ளது மகிழ்ச்சியானது.

நாளை இஸ்ரேலில் விவசாயத்துறையில் பண்ணிக்காக செல்லும் 43 குழுவினர் சிறந்த முறையில் பணியாற்றுவதன் மூலம் இஸ்ரேலுக்கு வேலைவாய்ப்பு நிமிர்த்தம் செல்லக் காத்திருக்கும் 8000 பேருக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். அதுமட்டுமின்றி ஹோட்டல் பிரிவுக்கு திறமையான தொழிலாளர்களாக அனுப்ப எங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

அவை தொடர்பான ஒப்பந்தங்கள் கூட பெறப்பட்டுள்ளன வேலைவாய்ப்புகளுக்காக இஸ்ரேல் சென்று முறைகேடாக நடப்பவர்களை நாட்டிற்கு திரும்ப அழைத்து அவர்கள் மீண்டும் வெளிநாட்டிற்கு செல்ல முடியாவாறு கருப்புபட்டியலில் இணைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறோம்.

ஏனைய நாடுகளினுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது எனவே ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது மாத்திரமே எஞ்சியுள்ளது இவ்வாறான வேலைத்திட்டங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாத சில அரசியல் கட்சிகள் தாய்நாட்டிற்கு வருகின்ற நற்செய்தியை விரும்புவதில்லை.

நாட்டிட்ற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து முதல் தவனை கடன் பெறப்பட்டதும், 40 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. தற்போது கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்துள்ளது, சர்வதேச தரவரிசையில் இலங்கை பொருளாதாரத்தில் முன்னோக்கி நகரும் நிலையில் 25,000 ரூபா சம்பள அதிகரிப்பு வேண்டி வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றுவருகின்றன. யார் வேலைநிறுத்தம் செய்தாலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியாக அதிகாரிகள் இன்றும் பணிபுரிகின்றனர்.

அவர்கள் எமது மரியாதைக்கு உரியவர்கள். அரசத்துறையில் உள்ள பதினைந்து லட்சத்து பணியாளர்களுக்கும் 25,000 ரூபாய் சம்பளத்தை அதிகரித்தால் மேலும் 400 பில்லியன் பணம் திறைசேரிக்கு தேவைப்படும் தற்போதைய சூழலில் இந்த பணத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது அவ்வாறாயின் மீண்டும் வரியை அதிகரிக்க வேண்டும்.

அரசு ஊழியர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடவே இம் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. வேலை வாய்ப்பை இல்லாதொழித்து, பாடசாலைகளை மூடுவதன் மூலம் மீண்டும் 87-89 காலப்பகுதி போன்ற அராஜக நிலைமையை ஏற்படுத்தி இளம் மாணவர்களை வீதிக்குக் கொண்டு வந்து, அவர்களின் அரசியல் இலக்குகளை நிறைவேற்றுவது அவர்களது திட்டம் என அமைச்சர் தெரிவித்தார்.

# மட்டு மாவடிவேம்பு வைத்தியசாலையில் பழுதடைந்த பாண் வழங்கிய ஒப்பந்தகாரரின் ஒப்பந்தம் இரத்து உணவு வழங்கிய கடை உரிமையாளருக்கு ஒருமாத சிறை



மட்டக்களப்பு மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலை நோயாளர்களுக்கு மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவான பாண் வழங்கிய ஒப்பந்தகாரரின் ஒப்பந்தத்தை ஏறாவூர் நீதவான் நீதிமன்ற நீதவான் உடனடியாக இரத்து செய்ததுடன் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறும் உணவு உற்பத்தி செய்த கடை உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் ஒரு மாதகால சிறைத்தண்டனையை வழங்கி 08-07-2024 திங்கட்கிழமை தீர்பளித்தார்.

மாவடி வேம்பு பிரதேச வைத்தியசாலை நோயாளிகளுக்கு காலை உணவாக மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவான பழுதடைந்த பாண் வழங்கியுள்ளர். இது தொடர்பாக நோயாளர்கள் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து சுகாதார வைத்திய அதிகாரி, மற்றும் செங்கலடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகளை வைத்தியசாலை நோயாளிகளுக்கு வழங்கிய குற்றச்சாட்டின் கீழ் வைத்தியசாலைக்கு உணவு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தகாரர், உணவை வழங்கிய கடை உரிமையாளரிற்கு எதிராக ஏறாவூர் நீதிவான் நீதிமன்றில் 08-07-2024 திங்கட்கிழமை வழக்கு தாக்குதல் செய்து இருவரையம் ஆஜர்படுத்தினர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் நோயாளர்களுக்கு உணவு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தகாரரின் ஒப்பந்தத்தினை உடனடியாக இரத்து செய்ததுடன் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் அதை உரிய தவணையில் கட்டத்தவறின் 3 மாதகால சிறைத்தண்டனையும் 10 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாத சிறை தண்டனையும் வழங்கி உணவு தயாரித்து வழங்கிய கடை உரிமையாளரை 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் ஒரு மாதகால சிறை தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

# மட்டு கரடியனாற்றில் பெருமளவிலான ஆயுதங்கள் மீட்பு



மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள காரைக்காடு பிரதேசதில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் 299 ஜொனி கண்ணிவெடிகள், 19930 ரி.56 ரக துப்பாக்கி ரவைகள், 38 பியூஸ் வெடிபொருள் துண்டுகள் உட்பட பெருமளவிலான ஆயதங்கள் 10-07-2024 புதன்கிழமை 1மீட்டுள்ளதாக வாழச்சேனை கடதாசி ஆலை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பாளர் பொலிஸ் பரிசோதகர் கே.ஜி.லக்மல் குமார தெரிவித்தார்.



விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர ஆலோசனையின்படி அம்பாறை பிராந்திய கட்டளை அதிகாரி திரு.ஏ.எஸ்.பி.குணசிறி, மட்டுமாவட்ட விசேட அதிரடிப்படை பொறுப்பாளர் சம்பத் குமாரவின் வழிகாட்டலில் வாழைச்சேனை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கே.ஜி.லக்மல் குமார, வவுணதீவு, கல்லடி, களவாஞ்சிக்குடி முகாம் கட்டளை அதிகாரிகள் தலைமையில் நீதிமன்ற உத்தரவை பெற்று இந்த அகழ்வுபணி இடம்பெற்றது.

இதில் மிகவும் பாதுகாப்பாக பொலிதீன் பைகளில் சுற்றப்பட்டு புதைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் 299 ஜொனி கண்ணிவெடிகள், 19930 ரி.56 ரக துப்பாக்கி ரவைகள், 38 பியூஸ் வெடிபொருட்களை மீட்டனர். இதில் மீட்டகப்பட்ட ஆயுதங்களை நீதிமன்ற அனுமதியை பெற்று வெடிக்கவைத்து அழிப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த காலத்தில் இந்த பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
aches
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Head-
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

கனடிய செய்திகள்
Canadian News

# "கனடியத் தமிழர்களின் கனவான "தமிழ்ச் சமூக மையம்" நிஜமாக எழுந்து நிற்பதற்கு, எமது மக்களின் பங்களிப்பு இன்னும் அதிகளவு தேவைப்படுகின்றது"

## தமிழ்ச் சமூக மைய நிதிச் சேகரிப்புக் குழுவின் சார்பில் உறுப்பினர்கள் அனைவரும் வேண்டுகோள்



"கனடியத் தமிழர்களின் கனவான "தமிழ்ச் சமூக மையம்" நிஜமாக எழுந்து நிற்பதற்கு, எமது மக்களின் பங்களிப்பு இன்னும் அதிகளவு தேவைப்படுகின்றது. கனடாவின் மத்திய அரசுமற்றும் ஒன்றாரியோ மாகாண அரசு ஆகியவை வழங்கிய நிதி ஒதுக்கீடுகள் மற்றும் எமது சமூக உறுப்பினர்களின் மத்தியிலிருந்து நாம் திரட்டிய நிதி அனைத்தையும் தவிர்த்து எமக்கு 25 மில்லியன் டாலர்கள் தேவைப்படுகின்றது. அதைப் பெற்றுக்கொள்வதற்கு எமது தமிழ்ச் சமூகத்தின் 2500 குடும்பங்களிடமிருந்து தலா 10000 டாலர்களைத் திரட்டி அந்த தொகையை ஈடுசெய்து கொள்ளலாம் என்று நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

ஆனால் அந்த முயற்சி ஆமை வேகத்தில் தான் செல்கின்றது. எனவே எமது கனடா வாழ் தமிழ் மக்கள் எமது முயற்சிக்கு பச்சைக் கொடி காட்ட வேண்டும்."

இவ்வாறு கனடா ஸ்காபுறோ நகரில் அமையவுள்ள தமிழ்ச் சமூக மைய நிதிச் சேகரிப்புக் குழுவின் சார்பில் அதன் உறுப்பினர்கள் அனைவரும் வேண்டுகோள் விடுத்தனர்.

10-07-2024 புதன்கிழமை மாலை ஸ்காபுறோ ஜேசிஎஸ் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் மக்களுக்கான ஒன்று கூடல் மற்றும் இராப்போசன விருந்து ஆகியவற்றை நடத்திய மேற்படி நிதிக் குழுவினர் தொடர்ந்து அங்கு கலந்து கொண்டவர்களிடமும் நேரடியாக உரையாடினர்.

மேற்படி நிதிக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் எட்டு அன்பர்களும் அங்கு வருகை தந்து எமது தமிழ் மக்களின் எதிர்காலத்தில் ஒரு அடையாளமாக விளங்கவுள்ள இந்த தமிழ்ச் சமூக மையம் நிதர்சனமாக அழகுடன் எழுந்து நிற்கும் வகையில் எமது நிதிச் சேகரிப்புக் குழுவினரோடு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

Contact: (416) 200-5470














Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வன்னி மனித புதை குழியின் எதிர்கால அகழ்வின்போது மரபணு பரிசோதனைக்காக மாதிரிகள் சேகரிக்கப்படும்

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட்
(11-07-2024)

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் மற்றும் பெண் போராளிகளுடையது என நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிபுணர் அறிக்கையின் அடிப்படையில் அனுமானிக்கப்பட்ட, வன்னிப் புதைகுழிகளின் சடலங்களை அடையாளம் காண, மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென, அகழ்வாராய்ச்சிக்குப் பொறுப்பான பிரதான தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்க பட்டதையடுத்து, கொக்குத்தொடுவாய் வெகுஜன புதை குழியின் மீட்கப்பட்ட எச்சங்கள், காணாமல் போனவர்கள் உடையதா என, காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் (OMP) தவிசாளர் மகேஷ் கட்டுலந்த சந்தேகம் வெளியிட்டிருந்தார்.

"காணாமல் போனவர்களின் தலைவிதியை மிக உயர்ந்த தரத்திற்கு அமைய கண்டறிவதோடு, இது வரையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள காணாமல் போனவர்களுக்கும், கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதை கண்டறிய எதிர்பார்க்கின்றோம்."

"காணாமல் போனவர்களை எவரேனும் அடையாளம் காண விரும்பினால், அதற்கு ஒரே வழி குழியிலிருந்து பெறப்பட்ட உயிரியல் கைரேகைகளை (biological fingerprints) பகுப்பாய்வு செய்வதே" என பேராசிரியர் ராஜ் சோமதேவ ஜூலை 10 கொக்குத்தொடுவாய் அகழ்வு இடம்பெறும் பகுதியில் வைத்து வன்னி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

போரின் போது காணாமல் போனவர்களை அடையாளம் காண தேவையான உயிரியல் மாதிரிகள் ஏற்கனவே விசாரணைக் குழுவினரால் சேகரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்த தொல்பொருள் நிபுணர், நீதிமன்ற உத்தரவை பெற்று விஞ்ஞான ரீதியான ஆய்வினை மேற்கொண்டு அவர்களின் சரியான காலத்தை கண்டறிய முடியும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

"மறுபுறம், இந்த சந்தர்பத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்காக பல சத்திய கடதாசிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கௌரவ நீதவான் தெரிவித்தார். எனவே, எதிர்காலத்தில் ஏதேனும் மரபணு பரிசோதனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், தகுந்த மாதிரிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். மிகவும் முறையான மற்றும் விஞ்ஞான ரீதியில், அதாவது ஒவ்வொரு எலும்புக்கூட்டிலிருந்தும், இந்த மூன்றாவது கட்டத்தில் பெறப்படும் ஒவ்வொரு எலும்புக்கூட்டிலிருந்தும் மாதிரியைப் பெற திட்டமிட்டுள்ளோம்."

பாரிய புதைகுழியின் முதலாவது மற்றும் இரண்டாவது அகழ்வின்போது, பணிகளுக்கு சரியான முறைகள் பின்பற்றப்படாமையால், அவ்வாறான மாதிரிகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை என பேராசிரியர் வன்னி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"கடந்த முறை, கனரக வாகனங்கள் மற்றும் கனரக இயந்திரங்கள் மூலம் ஏற்கனவே அகழ்வு மேற்கொள்ளப்பட்டமையால் நிறைய இடையூறுகள் ஏற்பட்டன. இதனால், முதல் கட்டத்திலும், இரண்டாம் கட்டத்திலும் அவற்றைச் செய்ய முடியாமல் போனது. எனவே அத்தகைய இடத்திலிருந்து இதுபோன்ற சோதனைக்கான மாதிரிகளை எடுப்பது ஆபத்தானது. ஆனால் இந்த முறை, எதிர்காலத்தில் எந்தவொரு அறிவியல் ஆய்வுக்கும் பயன்படுத்தக்கூடிய மாதிரிகளை எங்களால் சரியான முறையில் பெற முடிந்தது."

40 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் அளவு குறித்தும், விசாரணைகளுக்கு முன்னோடியாக இருக்கும் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ விளக்கமளித்துள்ளார்.

"இந்த மூன்றாவது சந்தர்ப்பத்தில், நான்கு மனித எலும்புக்கூடுகளை எங்களால் கண்டுபிடிக்க முடிந்துள்ளது. மேலதிகமாக கடந்த இரண்டாம் கட்டத்தில் நாங்கள் இங்கே அகற்றாத மேலும் மூன்று மனித எலும்புக்கூடுகள் உள்ளன. இவற்றை பார்க்கும்போது, இப்போது ஏழு எலும்புக்கூடுகளை அகற்ற வேண்டியுள்ளது. நாங்கள் அகழ்வுப் பணிகளைத் தொடர்கிறோம். இந்த அகழ்வின் முடிவுகளுக்கு அமைய இந்த இடத்தில் மேலும் பல எலும்புக்கூடுகள் இருப்பதைப் புரிந்துகொள்ளக்கூடிய சான்றுகள் எங்களிடம் உள்ளன. ஆனால் இதன் எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்வது எங்களுக்கு இன்னும் கடினமாக உள்ளது. எலும்புக்கூடுகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்படாமல் இருப்பதால், அகழ்வுப் பணிகள் முடியும் வரை சரியான தீர்மானத்திற்கு வருவது எங்களுக்கு கடினமாக உள்ளது.

எனவே, இந்த எலும்புக்கூடுகள் ஒன்றின் மேல் ஒன்றாக விழுந்துள்ளதால் அவற்றை அகற்றுவது மிகவும் சிக்கலானது என நான் நினைக்கிறேன், எனவே அவற்றை மிகவும் கவனமாக அகற்ற வேண்டும்."

மனித எலும்புக்கூடுகளுக்கு மேலதிகமாக, வெகுஜன புதைகுழியில் கண்டறியப்பட்ட பகுப்பாய்வுக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்கள் குறித்தும் தடயவியல் தொல்பொருள் பேராசிரியர், விளக்கமளித்திருந்தார்.

"நாங்கள் இரண்டு முக்கியமான சில தொல் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளோம், அதாவது, பகுப்பாய்வுக்கு பொருத்தமான, பயன்படுத்தக்கூடிய இரண்டு பொருட்கள் கிடைத்துள்ளன. துப்பாக்கிச் சன்னத்தின் தலை. ஒரு புல்லட் ஹெட். மற்றொன்று இரண்டு கம்பி துண்டுகள் கிடைத்துள்ளன. எனவே நாம் அதை சுத்தம் செய்து பகுப்பாய்வு செய்ய வேண்டும். இன்று அந்த இரண்டும்தான் எங்களுக்கு கிடைத்தன."

மீட்கப்பட்ட பொருட்களின் பகுப்பாய்வு தாமதமானதற்கான காரணத்தையும் அவர் தெளிவுபடுத்தினார்.

"அது தவிர, மட்பாண்ட துண்டுகள், உடைந்த கண்ணாடி போத்தல்கள் மற்றும் பிற இரும்புத் துண்டுகளையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம். மட்பாண்ட துண்டுகள், கண்ணாடித் துண்டுகள், பிற இரும்புத் துண்டுகளுக்கும், எலும்புக்கூடுகளுக்கும் இடையிலான தொடர்பு என்னவென எமக்குத் தெரியவில்லை. அகழ்வு முடியும் வரையில் இதுத் தொடர்பில் நாம் ஆராய வேண்டும். மேலும் கிடைக்கின்றவற்றை பார்த்து, அவர்களின் நிலைகள் மற்றும் அவைகள் எவ்வாறு இதனுடன் தொடர்புபடுகின்றன என்பது தொடர்பிலும், இறந்தவர்களுடன் அவைகளுக்கு நேரடியாக தொடர்பு காணப்படுகிறதா அல்லது அந்த சம்பவத்துடன் தொடர்புடையதா? இல்லையெனில், உடல்கள் வேறு இடத்தில் இருந்து குப்பையைப்போல் இங்கு கொண்டு செல்லப்பட்டனவா? என்பதை ஆய்வு செய்து தீர்மானிக்க சிறிது காலம் எடுக்க வேண்டும்."

ஒரு வருடத்திற்கு முன்னர் வன்னியில் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்ட வெகுஜன புதைகுழியின் காலக்கணிப்புக்கான கார்பன் பரிசோதனைக்கு தேவையான மாதிரிகளை சேகரிக்கும் உத்தரவு இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என அவர் கூறுகிறார். ஒரு வெளிநாட்டு ஆய்வகத்தில் சரியான காலத்தை தீர்மானிக்க, கார்பன் 14 அல்லது "பொம்ப் பள்ஸ்" அல்லதுபகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்பது அவரது பரிந்துரை.

"இந்த சம்பவம் நடந்த காலத்தை பரிந்துரைக்க நீதிமன்றம் எனக்கு உத்தரவிட்டுள்ளது.

அதனால் நான் அதை செய்துள்ளேன். ரிலேடிவ் டேட் (தொடர்புடைய காலப்பகுதி) நீதிமன்றத்தில் எவராவது கோரிக்கை வைத்தாலோ, விஞ்ஞான சோதனைக்கு அனுப்ப நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தாலோ, அகழும்போதே தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் நாம் அதில் மாதிரிகளை சேரிக்க வேண்டும். எனினும் அவ்வான ஒன்று இன்னும் வரவில்லை."

கொக்குத்தொடுவாய் வெகுஜன புதைகுழியில் அகழ்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இதுவரை எவ்வித அழுத்தமும் விடுக்கப்படவில்லை என, வன்னியில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த பேராசிரியர், மகிழ்ச்சியாகவும் ஒத்துழைப்புடனும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

"எல்லோரும் எங்களுடன் மிகவும் நட்பாக இருக்கிறார்கள். எங்களுக்கு இதுவரை அவ்வாறான அழுத்தம் அல்லது பாதிப்பும் எதுவும் இல்லை."

2023 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில், கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்திலிருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில், நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைத் துண்டுகள் வெளிப்பட்டன.





# மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதுவும் நடை முறைப் படுத்தப் படுவதில்லை – சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (10-07-2024)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் என்ற போர்வையிலே அபிவிருத்தி குழுவின் தலைவர் தனது அரசியலை முன்னெடுத்து செல்வதற்காகவும் ,தன்னை பிரபலப்படுத்திக் கொள்வதற்காகவும், இக்கூட்டத்தை நடத்துவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் என்.எம்.எம்.பாரிஸ் விசனம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் 10-07-2024 புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தி குழு கூட்டம் என்கிற போர்வையில் அபிவிருத்திக் குழு கூட்டம் இடம்பெற்று வருகின்றது. வழமையாக இடம் பெற்று வரும் அபிவிருத்தி குழு கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற எடுக்கப்படும் தீர்மானங்கள் எதுவும் நடை முறைப் படுத்தப் படுவதில்லை.

அரச திணைக்கள அதிகாரிகளை அழைத்து செலவீனங்களை வழங்கு கின்றார்களோ தவிர இங்கு எடுக்கப்படுகின்ற தீர்மாணங்கள் சேவைகள் எதுவும் மக்களை சென்றடைவது இல்லை.

மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தி குழு கூட்டம் என்ற போர்வையிலே அபிவிருத்தி குழுவின் தலைவர் தனது அரசியலை முன்னெடுத்து செல்வதற்காகவும், தன்னை பிரபலப்படுத்திக் கொள்வதற்காகவும், இக்கூட்டத்தை நடத்துகின்றார்.

இக்கூட்டத்தை நடத்துவதில் எவ்வித பலனும் இல்லை.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான மணல் மற்றும் கிரவல் போன்றவற்றை தனது ஆதரவாளர்களுக்கு அனுமதியை வழங்கியுள்ளார்.

குறித்த விடயத்தை வன்மையாக கண்டிக்கின்றோம்.

மேலும் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு அனைத்து திணைக் களங்களுக்கும் தனது சிபாரிசு கிடைத்தால் மட்டுமே மணல் மற்றும் கிரவல் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி வழங்க வேண்டும் கடுமையாக எச்சரித்துள்ளார். இவ்விடயத்தை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு

இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு 07-07-2024 அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. - அரசாங்ம், ஆசிரியர் மீதான அடாவடி மற்றும் அசமந்த போக்கு தொடர்பில் இதன் போது கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

தற்போதைய காலத்தில் அரசாங்கம், ஆசிரியர் மீது பல்வேறுபட்ட வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இலங்கையில் தற்சமயம் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் பணம் இல்லை என்று கூறும் அதே நிலையில் மறுபுறம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரி இல்லாத வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரங்கள் வழங்கி உள்ளது. அரசாங்கம், பூநகரி பிரதேசம் மற்றும் வவுனியா பிரதேசத்தில் புதிய மதுபான சாலைகளை திறப்பதற்கு அனுமதி பத்திரம் வழங்கியுள்ளது.

இதன் மூலம் அரசாங்கம் பொருளாதாரத்தை ஈடு செய்வார்கள் என்றால் இல்லை. நாட்டில் அபிவிருத்தி என்பது மிகவும் கீழ்நிலை நோக்கி செல்கின்றது. இவ்வாறு தெரிவித்தார் இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் புயல்நேசன். யாழ்ப்பாணத்தில் இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். தற்பொழுது அரசாங்கத்தின் இயலாமை தன்மையை ஆசிரியர்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது. எங்கள் போராட்டம் தொடரும்.

அரசாங்கம், ஆசிரியர்கள் மீது கை வைக்குனால், வகுத்தன போராட்டங்கள் இலங்கை இரீதியில் இடம்பெறும். அதனை இந்த அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாமல் போகும். பாடசாலைகள் முடக்கப்படும். இந்த நாட்டில் அரசியல்வாதிகள் வைத்தியர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உட்பட அனைத்து துறைகளில் உள்ளவர்களையும் ஆளாக்கியது ஆசிரியர்களே. ஐ ஆசிரியர்கள் மீது கை வைக்க வேண்டாம் என்று நாங்கள் அரசாங்கத்திற்குக் கூறுகின்றோம். எங்கள் போராட்டங்கள் நியாயமானது. போராடும் எங்களை முடக்க நினைக்க வேண்டாம்.

அத்துடன் வினை திறன் தடை தாண்டல் பரீட்சை, பதவி உயர்வு தொடர்பிலும் ஆசிரியர்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். 3,1 ஆசிரியர் 2,2 ஆசிரியர் 2,1 ஆசிரியர் இவர்கள் அனைவரும் தங்களுடைய பதவி நிலைகளை அடுத்தடுத்து கொண்டு செல்வதில் பல்வேறு இடங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சிலருக்கு மூன்று வருடங்கள் என்ற அடிப்படையிலும் சில பேருக்கு நான்கு வருடங்கள் என்று அடிப்படையிலும் காணப்படுகின்றது. சில இடங்களில் மூன்று வருடங்கள் முடித்தவர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது, சில இடங்களில் மூன்று வருடங்களுக்கு குறைவாக, முடிக்காதவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

அதேபோல் வழிகாமம் கல்வி வளையத்தில் 54 மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. புற்று நோய் உட்பட பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு உள்ளானவர்களும் உள்ளடங்கப்பட்டுள்ளனர். உண்மையில் ஆசிரியர்களுக்கு வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை தேவை.

இந்த ஆசிரியர்களுக்கு உரிய காலப்பகுதியில் பரீட்சை நடத்தப்படவில்லை என்றும் வலிகாமம் கல்வி வலயத்தில் அதிகளவான ஆசிரியர்கள் உள்ள காரணத்தால், அதேபோல் யாழ்ப்பாண கல்வி பிரிவில் அதிகளவான ஆசிரியர்கள் உள்ளமையாலும் ஆசிரியர் நிலையங்கள் வினைத்திறன் தடை தாண்டல்பரீட்சையை உரிய காலத்தில் நடத்தவில்லை. அதனை நடத்தாமல் விட்டது ஆசிரியர் மத்திய நிலையத்தைச் சார்ந்தது. ஆகவே ஆசிரியர்களின் பதவி உயர்வு இரண்டு வருடங்கள் அல்லது மூன்று வருடங்கள் பின்னோக்கி சென்றுள்ளது.



# ஐயாயிரம் ரூபாய் தந்தால் மட்டுமே பரீட்சை பெறுபேறு – கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய பழைய மாணவனிடம் பணம் கேட்ட அதிபர்


பழைய மாணவர் சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
(தேசிய பாடசாலை)
வரவுத்துண்டு
மட்டும் பெற்றுக்கொண்டேன்
5000/-

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தை சேர்ந்த பழைய மாணவன் தனது க.பொ.த உயர்தர பரிட்சை பெறுபேற்றுப் பத்திரத்தை கல்லூரியில் பெறச்சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஆயுட்காலச் சந்தாவாக ரூபா 5,000 செலுத்தி உறுப்பினராகினால் மட்டுமே பரிட்சை பெறுபேற்றுப் பத்திரத்தை வழங்க முடியுமென பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து குறித்த பாடசாலையின் அதிபர் திரு. பூலோகராஜா அவர்களை தொடர்புகொண்டு வினவியவேளை குறித்த குற்றச்சாட்டை மூடிமறைக்கும் விதத்தில் பதில் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் காயத்திரி அவர்களை தொடர்பு கொண்டு வினவியவேளை, சமூக ஊடகங்களில் இந்த பிரச்சினை குறித்து பதிவுகள் உள்ளதை தான் பார்த்ததாகவும், இது குறித்து விசாரணை மேற்கொள்வதாகவும் அவர் கூறினார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4



# ஒரு மருத்துவர் செய்த கலகம்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**சா**வகச்சேரி மருத்துவமனையின் முன்னாள் அத்தியட்சகர் மருத்துவர் அர்ஜுனா தனக்கு வந்த பிரச்சினைகளை வெளிப்படுத்தியவிதம் சரியா? அதில் அவர் முன் வைக்கும் குற்றச்சாட்டுகள் சரியா? அல்லது, அந்த மருத்துவமனையின் நலன்புரி சங்கம் வெளியிட்ட அறிக்கை சரியா? அல்லது அது தொடர்பாக அந்த மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர்கள் கூறுவது சரியா? அல்லது மருத்துவர் அர்ஜுனாவைப் பாதுகாப்பதற்காக அங்கு திரண்ட மக்கள் கூறுவது சரியா? போன்ற விவாதங்களுக்குள் இறங்குவது இக்கட்டுரையில் நோக்கமன்று.

மாறாக, தங்களைப் பாதிக்கும் ஒரு பிரச்சினை என்று வரும்பொழுது மக்கள் இப்படியெல்லாம் தெருவில் இறங்க முடியும் என்பதற்கு இது ஒரு ஆகப் பிந்திய உதாரணம். சமூக வலைத்தளங்களின் காலத்தில், யூ டியூபர்களின் காலத்தில் மக்கள் தங்கள் குரலை ஓங்கி ஒலிப்பதற்கு அதிகரித்த வாய்ப்புகள் உண்டு என்பதைக் காட்டிய ஆகப் பிந்திய சம்பவம் அது.

அதில் யூடியூப்கள் நடந்து கொண்ட விதம் சரியா? ஊடகங்கள் நடந்து கொண்ட விதம் சரியா? அல்லது சமூகவலைத் தளங்களில் அந்த செய்தி பரிமாறப்பட்ட விதம், கையாளப்பட்ட விதம், விவாதிக்கப்பட்ட விதம், போன்றன சரியா? என்ற விவாதங்களுக்குள் இறங்குவதும் இக்கட்டுரையின் நோக்கமன்று. மாறாக, சமூக வலைத்தளங்களின் காலத்தில் ஒரு தனிநபர் தனது நிலைப்பாட்டை எப்படி மக்கள் மயப்படுத்தலாம்? மக்களைத் தன்னை நோக்கித் திரட்டலாம்? என்பதற்கு இது ஆகப் பிந்திய உதாரணம்.

குறிப்பிட்ட தனிநபரின் நிலைப்பாடு சரியா பிழையா என்பதற்கெல்லாம் அப்பால் அது மக்களுடைய பொது புத்திக்குள் ஏற்கனவே ஒரு குறையாக; ஒரு பிரச்சினையாக இருக்கும் விவகாரத்தோடு தொடர்புடையதாக இருக்கும் பொழுது, மக்கள் அதற்காக ஒன்று திரள்வார்கள் என்பதற்கு இது ஆகப்பிந்திய உதாரணம்.

அது ஒரு விதத்தில் தானாகத் திரண்ட ஒரு கூட்டம். அப்பகுதியைச் சேர்ந்த, ஒரு முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர் - அவர் ஊடகங்களோடு தொடர்புடையவர் - அந்த விவகாரத்தை கையில் எடுத்து தன்னை பிரபல்யப்படுத்திக் கொண்டார் என்று சில விமர்சனங்கள் உண்டு. தொடக்கத்தில் இருந்தே அவர்தான் குறிப்பிட்ட மருத்துவருக்கு அடுத்தபடியாக ஊடகங்களில் அதிகமாக தெரிந்தார். அந்த விடயத்தைத் அவர் உணர்ச்சிகரமாக அணுகினார். அதனால் இடையில் கைது செய்யப்பட்டு பின் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும், குறிப்பிட்ட மருத்துவரை பாதுகாப்பதற்காகவும் அவருக்கு ஆதரவாகவும் அங்கு திரண்ட மக்கள் கூட்டத்தை அவர்தான் முழுமையாகத் திரட்டினார் என்று மிகைப்படுத்திக் கூறவும் முடியாது.

அரச மருத்துவமனைகளை தமிழர்கள் தர்மாஸ்பத்திரி என்று அழைப்பார்கள். அவை உண்மையாக தர்மாஸ்பத்திரிகள் அல்ல. மக்களின் வரிப்பணம்தான் அங்கே தர்மமாகத் திரும்பிவருகிறது. மக்களின் வரிப்பணம்தான் அங்கு வேலை செய்யும் மருத்துவத்துறை பணியாளர்களுக்குச் சம்பளமாக வழங்கப்படுகிறது. அதே வரிப்பணத்தில் திரட்டிய பணம்தான், இலவச மருந்தாக, இலவச சிகிச்சையாகவும் கிடைக்கின்றது. அரச மருத்துவமனைகளில் வேலை செய்யும் எல்லாருக்கும் சம்பளம் கிடைக்கின்றது. யாரும் இலவசமாக சேவை செய்யவில்லை. எனினும், ஒரு தொகுதியினர் வாங்கும் சம்பளத்தைவிட அதிகமாக வேலை செய்கிறார்கள். எனவே எதுவும் தர்மமாக கிடைக்கவில்லை. மக்களிடம் வசூலித்த வரியை அரசாங்கம் திருப்பித் தருகிறது என்பதுதான் சரி.

எனினும், அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகளாகக் கருதும் ஒரு சமூகம், அதில் வேலை செய்யும் மருத்துவர்களை தர்மவான்களாகவும் உயர்வானவர்களாகவும் உயிர்காக்கும் உத்தமர்களாகவும் பார்க்கின்றது. அதனால்தான் மருத்துவர்களுக்கு எல்லாவற்றிலும் முன்னுரிமை தரப்படுகின்றது.

உதாரணமாக வீதியில் வேகக் கட்டுப்பாட்டை மீறி வாகனத்தை செலுத்தும் மருத்துவர்களை பெரும்பாலும் காவல்துறை தண்டிப்பது குறைவு. சீதனச் சந்தையிலும் மருத்துவருக்கு மவுசு அதிகம். இவ்வாறு மருத்துவர்களை உயர்வாகப் போற்றும் ஒரு சமூகத்தில், மருத்துவர்கள் மீதும் மருத்துவத் துறை மீதும் குற்றச்சாட்டுகள் வரும்பொழுது அவை பெரிதாக்கப்படுகின்றன. மிக உயர்வாக மதிக்கப்படும் ஒன்றின் மீது வைக்கப்படும் விமர்சனங்கள் மிகக் கீழ்த்தரமானவைகளாக அமைவதுண்டு.

இதுதான் சாவச்சேரியிலும் நடந்தது. மருத்துவர் அர்ஜுனா உள்வீட்டு விவகாரங்களை வெளியே கொட்டிவிட்டார். அவர் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக அவ்வாறு சிஸ்டத்தின் மீது ஏற்கனவே உள்ள விமர்சனங்களையும் கோபத்தையும் திட்டமிட்டுத் திருப்பி விட்டார் என்ற ஒரு விமர்சனமும் உண்டு. எதுவாயினும் அவர் மூட்டிய சிறு பொறி பெரு நெருப்பாக மாறும் அளவுக்கு சமூகத்தில் மருத்துவத்துறை சார்ந்து அதிருப்திகளும் சந்தேகங்களும் கேள்விகளும் இருந்திருக்கின்றன என்பதைத்தான் சாவகச்சேரியில் மக்கள் காட்டிய எதிர்ப்பு நமக்கு உணர்த்துகின்றது.

மிகக்குறிப்பாக மருத்துவர் அர்ஜுனா சிஸ்டத்தின் மீது எழுப்பும் கேள்விகளுக்கு இதுவரை யாரும் உத்தியோகபூர்வமாகப் பதில் சொல்லவில்லை. அதேசமயம் அவருடைய ஆஸ்பத்திரியில் வேலை செய்த சக மருத்துவர்கள் பெருமளவுக்கு அவருக்கு எதிராகவே காணப்படுகிறார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அர்ச்சுனாவுக்கு சாதகமாகக் கதைத்திருக்கிறார். கடந்த ஒன்பதாம் தேதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில் அவர் அர்ஜுனாவின் பக்க நியாயங்களை எடுத்துக் கூறியிருக்கிறார். விவகாரம் ஒரு சர்சையாக மாறியபொழுது அமைச்சர் மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்றிருக்கிறார். இது தொடர்பாக அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை உருவாக்கி விசாரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்கிறார்.

ஆனால், மருத்துவமனையின் நோயாளன் நலன்புரிச் சங்கம் மக்களுடைய குற்றச்சாட்டுகளோடு நிற்பதாக தெரியவில்லை. அவர்கள் வெளியிட்ட அறிக்கையானது அர்ச்சுனாவுக்கு எதிராகக் காணப்படுகின்றது.

இதில் அர்ஜுனா சொல்வது சரியா அல்லது நோயாளர் நலன்புரி அமைப்பு சொல்வது சரியா? அல்லது யாழ் மாவட்ட மருத்துவ நிர்வாகிகள் சொல்வது சரியா? என்பவற்றுக்கெல்லாம் அப்பால், மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் கொதிப்பு வெற்றிடத்தில் இருந்து வரவில்லை என்பதனை இங்கு சுட்டிப்பாகக் கவனிக்க வேண்டும்.

அதற்கு ஆழமான காரணங்கள் உண்டு. தர்மாஸ்பத்திரிகள் மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு தர்மாஸ்பத்திரிகளாக இல்லை என்ற விமர்சனம் மக்கள் மத்தியில் ஏற்கனவே உண்டு. வணிகமயப்பட்ட தனியார் மருத்துவத் துறை தொடர்பான விமர்சனங்களும் அதற்குள் அடங்கும். இலங்கையில் தனியார் மருத்துவத் துறையுடன் இணைந்து செயல்படும் பெரும்பாலான மருத்துவர்கள் அரச மருத்துவமனைகளிலும் வேலை செய்பவர்கள்தான். இதுவும் விமர்சனங்களுக்குக் காரணம். தனியார் ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் சிலர் "தர்மாஸ்பத்திரிகளில்" தமக்குரிய தொழில் தர்மத்தோடு நடந்து கொள்வதில்லை என்று மக்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் தோன்றும் விமர்சனங்களின் விளைவாகவே சாவகச்சேரியில் ஆஸ்பத்திரிக்கு முன் மக்கள் திரண்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி பிரதேசம் என்பது ஒப்பிட்டளவில் நிலப்பரப்பால் பெரியது. ஆனால் ஒப்பீட்டளவில் ஐதான குடியிருப்புகள்தான். எல்லா வளங்களையும் கொண்ட ஒரு மருத்துவமனை தங்கள் மத்தியில் இருந்த போதிலும் அது பொருத்தமான விதங்களில் பயன்படுத்தப்படவில்லை என்ற கோபம் அந்த மக்களை வீதியில் இறக்கியிருக்கிறது. எனவே அந்தக் கோபம் வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. தங்களுடைய பிரச்சினைகளைப் பேச முற்பட்ட ஒரு மருத்துவரை எனையவர்கள் தனிமைப்படுத்துகின்றார்கள், தண்டிக்க முற்படுகிறார்கள் என்பது மக்களை மேலும் கோபத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

இது மருத்துவமனைகளுக்கும் மருத்துவர்களுக்கு மட்டும் பொருந்தும் ஒரு விடயம் அல்ல. சாதாரண மக்கள் மத்தியில் காணப்படும் அதிருப்திகளும் கேள்விகளும் ஆத்திரங்களும் பொருத்தமான தருணங்களில் வெடித்து கிளம்புகின்றன. பொதுப் புத்தியில் ஆழமாகப் பதிந்திருக்கும் விமர்சனங்கள், வெறுப்பு போன்றவற்றுக்கு யாராவது ஒருவர் தலைமை தாங்கும்பொழுது அல்லது யாராவது ஒருவர் அதில் சிறு பொறியைப் பற்ற வைக்கும் பொழுது அது திரட்டப்பட்ட எதிர்ப்பாக வெளி வருகிறது.

மருத்துவர் அர்ஜுனா முகநூலையும் சமூக வலைத்தளங்களையும் உச்சமாகப் பயன்படுத்தினார். எப்பொழுதும் லைவ்வில் நின்றார்.அதைத்தான் தன்னுடைய பலம் என்றும் நம்பினார்.

பொதுவாக தமிழ் சமூகத்தில், அதாவது அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகளாக கருதும் ஒரு சமூகத்தில், மருத்துவர்கள் தங்களுக்குரிய உயர்ந்த ஸ்தானத்தை எப்படி பாதுகாக்கலாம்? எப்படி ஒதுங்கியிருக்கலாம் என்றுதான் சிந்திப்பார்கள். தமிழ்ச் சமூகத்தில் மருத்துவர்களுக்கு என்று ஒரு தனிக்குணம் உண்டு என்று நம்புமளவுக்கு அவர்கள் தங்களை எப்பொழுதும் தங்களுக்குரிய சௌகரிய வலையத்துக்குள் பத்திரமாக வைத்துக் கொள்வார்கள்.

ஆனால் அர்ஜுனாவைப் போல விதிவிலக்கான சிலர் சமூக வலைத்தளங்களில் அடிக்கடி லைவ்வில் வருகிறார்கள். பல மாதங்களுக்கு முன் கண்டாவளையைச் சேர்ந்த ஒரு பெண் மருத்துவர் அவ்வாறு சர்ச்சைகளுக்குள் சிக்கினார்.

அர்ஜுனாவின் பலம் அவர் எப்பொழுதும் சமூக வலைத்தளங்களில் லைவ்வில் நின்றது. ஆனால் அதுவே அவருக்கு பலவீனமாகவும் மாறலாம். அவர் தொடர்ச்சியாக மக்கள் முன் தோன்றினார். அதன்மூலம் அவர் தொடர்ச்சியாக தன்னுடைய பிரச்சினைகளை அப்டேட் பண்ணினார். அதன்மூலம் அவர் தொடர்ச்சியாக மக்களோடு உரையாடினார்.

இவ்வாறு யாரெல்லாம் தங்களோடு தொடர்ச்சியாக உரையாடுகிறார்களோ. தங்களைச் சரணடைகிறார்களோ, அவர்களை மக்கள் மதித்திருக்கிறார்கள் என்பதுதான் வரலாறு. தங்களுக்காக ஒருவர் தண்டிக்கப்படுகிறார் என்று கருதிய மக்கள் அவருக்கு ஆதரவாக மருத்துவமனைக்கு முன் திரண்டார்கள். சமூக வலைத்தளங்களின்மூலம் அவர் தன்னை ஒரு கதாநாயகனாக, கலகக்காரனாக வெற்றிகரமாக ஸ்தாபித்துக் கொண்டார். அதற்கு யூ டியூபர்கள் அதிகம் உதவினார்கள்.

அர்ஜுனா நல்லவரா கெட்டவரா என்ற விவாதம் இக்கட்டுரையின் பேசு பொருளுக்கு அவசியமானது அல்ல. அவர் தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ ஒரு கலகத்தைச் செய்திருக்கிறார். அதன் விளைவு மருத்துவத் துறை சார்ந்து புதிய கேள்விகளை மக்கள் மத்தியில் எழுப்பியிருக்கிறது. ஏற்கனவே உள்ள கேள்விகளையும் சந்தேகங்களையும் கோபத்தையும் அதிகப்படுத்தியிருக்கிறது. இது எதிர்காலத்தில் மருத்துவத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்துமா?

---

**வீணாவின் கவிக்கணை**

தேசங்கள் பல சென்றிருக்கலாம்,
ஊருக்கே ராஜாவாகவும்
இருக்கலாம்,
மாட மாளிகையில் வசிக்கலாம்,
கோடானு கோடி செல்வத்திற்கு
அதிபதியாகவும் இருக்கலாம்,
ஆனால் ஒருவர் மனதில் நாம்
இடம்பிடிக்க வேண்டுமென்றால்
நல்ல குணமானவராகவும்,
அளவில்லா அன்பினை பகிரத்
தெரிந்தவராகவும்,
சுற்றியிருப்பவரை சந்தோஷமாக
வைத்திருக்க தெரிந்தவராகவும்
இருந்தால் மட்டும் போதுமானது🙏

# நோயாளிகளை விட்டு ஓடிய வைத்தியர்கள் தமது பிள்ளைக்கு என்றால் செல்வார்களா? — போராட்டத்தில் ஈடுபட்ட பெண் கேள்வி

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களை கருத்தில் கொள்ளாது தமது சுகபோகங்களை அனுபவிப்பதற்காக வைத்தியசாலையை விட்டு ஓடிச் சென்ற வைத்தியர்களை எவ்வாறு மக்கள் நம்புவது என போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

08-07-2024 அன்றையதினம் திங்கட்கிழமை சாவச்சேரி ஆதார வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் அர்ச்சுனாவை மாற்றக்கூடாது மற்றும் வைத்தியசாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்குமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட பெண் ஒருவர், தமது சிறிய வயது காலத்தில் இருந்து இந்த வைத்தியசாலையை பயன்படுத்தி வருகிறோம்.

இங்கு வைத்தியர்கள் சுமார் 20க்கும் மேற்பட்டவர்கள் இருப்பது தற்போதைய வைத்தியர் அர்சுனா வெளிப்படுத்தியதன் மூலம் நாம் அறிந்து கொண்டோம்.

நாங்கள் சிகிச்சைக்கு வரும்போது வைத்தியர் இல்லை என பலமுறை திரும்பிச் சென்றிருக்கின்றோம் ஆனால் இங்கு இருபதுக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இருக்கும் விடயம் தற்போது தான் எமது மக்களுக்கு தெரியவந்தது.

இங்கு கடமையாற்றும் வைத்தியர்கள் பலர் வைத்தியசாலைக்கு வராது வீடுகளிலும் தனியார் வைத்திய சாலைகளிலும் கடமையாற்றுவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் சிலர் கடவுளுக்கு நிகராக வைத்திய துறையை கருதி சேவை செய்து வரும் நிலையில் சிலர் அவர்களையும் குழப்பி தமது நிகழ்ச்சி நிரலின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த மூன்று நாட்களாக வைத்தியர்கள் குறித்த வைத்திய சாலையை விட்டு வெளியேறச் சென்று இருக்கிறார்கள் அவர்களுடன் வைத்தியசாலையை விட்டுச் செல்ல விருப்பமில்லாத வைத்தியர்களும் நிர்பந்தத்தின் அடிப்படையில் சென்றிருப்பதை நான் அறிகிறோம்.

வைத்தியர் ஒருவர் வைத்திய சாலையில் நடக்கும் முறைகேடுகள் தொடர்பில் வெளிப்படுத்தியதற்காக ஏழை நோயாளிகளை கைவிட்டு விட்டு சென்ற வைத்தியர்கள் தமது பிள்ளை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டால் போராட்டம் என கூறி வெளியேறிச் செல்வீர்களா என குறித்த பெண் கேள்வி எழுப்பினார்.

# இந்திய இழுவை மடியின் பாதிப்பால் தாலியை கூட மீள முடியவில்லை — மீனவ சங்கப் பெண் தெரிவிப்பு



மாதகல் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்படியில் ஈடுபடும் இந்தியா இழுவைமடித் தொழிலாளர்களினால் ஏற்பட்ட இழப்பீட்டை நிவர்த்தி செய்வதற்கு எனது தாலியை அடகு வைத்தும் மீள முடியவில்லை என வலிகாமம் தென்மேற்கு கடற் தொழிலாளர் சமாசத்தின் பொருளாளர் பெனடிக் நிர்மலா தெரிவித்தார்.

11-07-2024 வியாழக்கிழமை மாதகல் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவின் அத்துமீறிய இழுவமடித் தொழிலாளர்களினால் எமது மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

எமது மீனவர்களின் பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான வலைகள் தொடர்ச்சியாக அறக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஒவ்வொரு மீனவனுக்கும் பல கோடி ரூபாய் கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இன்றையதினம் வியாழக்கிழமை மாதகல் கடற்பரப்புக்குள் இந்தியாவின் அத்துமீறிய இழுவைமடி தொழிலாளர்கள் மூன்று படகுகளில் வருகை தந்த நிலையில் கடற்கரையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களினால் எமது இருபதுக்கும் மேற்பட்ட மீனவர்களின் வேலைகள் அறத்து நாசம் செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான இழப்பீடு வழங்குவது யார்?

ஒவ்வொரு மீனவனின் குடும்பமும் இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளினால் கோடி ரூபாக்களை இழந்த நிலையில் பலரின் நகைகள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளன.

எனது பிள்ளைகளின் மீன்பிடி வலைகளும் இந்திய அத்துமீறிய இழுவை படகுகளினால் அறுக்கப்பட்டுள்ள நிலையில் புதிய வேலைகளை வாங்குவதற்காக எனது தாலியை வங்கியில் அடகு வைத்தேன்.

மீண்டும் தொடர்ச்சியாக இந்தியா இழுவமாடி படகுகளின் அத்துமீறலால் எனது பிள்ளைகளின் வலைகளும் அறுக்கப்பட்டு தரும் நிலையில் எனது வங்கியில் அடகு வைக்கப்பட்ட தாலியை மீள முடியாமல் உள்ளது.

ஆகவே இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளை நமது கடற்பரப்புக்குள் நுழைய விடாமல் கடற் படையினர் அவர்களை தொடர்ச்சியாக கைது செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் பிரதான பாலத்தடி யில் இருந்து அகற்றப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடி மீண்டும் உருவாக்கம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இந்தியா செல்ல வாய்ப்பு?



- எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் பிரதான பாலத்தடி யில் சில வருடங்களாக காணப்பட்ட இராணுவ சோதனைச் சாவடி கடந்த சில வாரங்களுக்கு முன் அகற்றப்பட்ட நிலையில் மீண்டும் புதிதாக அமைக்க பட்டுள்ளமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - அத்துருகிரிய பிரதேசத்தில், 08-07-2024 திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்த நிலையில் பலர் காயமடைந்துள்ளனர்.

எனினும் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் மன்னாரிற்கு சென்று தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் செல்ல உள்ளதாக புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளதாக புலனாய்வு செய்திகள் கிடைத்துள்ளது.

அதற்கு அமைவாக குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மன்னாருக்கு சென்று இந்தியாவிற்கு கடல் மார்க்கமாக தப்பிச் செல்ல சந்தர்ப்பங்கள் உள்ளன.

அதன் அடிப்படையில் மன்னாருக்குச் செல்லும் பிரதான பாலத்தடியில் விசேட இராணுவ சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக வேறு மாவட்டங்களில் இருந்து மன்னாரிற்குள் நுழைகின்ற சந்தேகத்திற்கு இடமான வாகனங்கள் சோதனைக்கு உற்படுத்தப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மன்னார் விபத்தில் உயிரிழந்த அருட்தந்தை ஜொனார்தன் வின் பூதவுடன் தூய செபஸ்தியார் பேராலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைப்பு





- எஸ்.ஆர்.லெம்பேட் (09-07-2024)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (7) இரவு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த மன்னார் மடு மாதா சிறிய குருமட உதவி இயக்குனர் அருட்தந்தை ஜொனார்தன் வின் பூதவுடன் மக்களின் அஞ்சலிக்காக 09-07-2024 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மன்னார் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் வைக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட மடுமாதா சிறிய குருமட உதவி இயக்குனர் அருட்தந்தை கீ. ஜொனார்தன் கூஞ்ஞ கடந்த ஞாயிற்றுக்கிழமை (7) இரவு மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார்.

அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை (08) பிற்பகல் மன்னார் பொது வைத்தியசாலையில் இருந்து மன்னார் ஆயர் இல்லத்தில் உள்ள சிற்றாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரவு 7 மணியளவில் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பின்னர் 9ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை ஆயர் இல்ல சிற்றாலயத்தில் காலை 7 மணியளவில் இரங்கல் திருப்பலியும் தொடர்ந்து காலை 8.15 மணிக்கு அவரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு எடுத்து வரப்பட்டது.

காலை 8.15 மணியிலிருந்து பிற்பகல் 2.45 மணி வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக அருட்பணியாளரின் பூதவுடல் வைக்கப்பட்டு இதைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் கூட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து செவ்வாய்க்கிழமை (9) மாலை 5 மணிக்கு பேராலயத்திலிருந்து மன்னார் சேமக்காலைக்கு அன்னாரின் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு 5.45 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டதுது.

# சம்பந்தனின் மரணத்தில் நடக்கும் "அரசியல்"

## சுமந்திரன்-சாணக்கியன் ஆகியோரின் கட்டுப்பாட்டில் தமிழரசுக் கட்சி இயங்கினால் அது வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு "ஆபத்துக்களை" விளைவிக்கும்

***"சம்பந்தனின் உயிர் பிரிந்தவுடனேயே சுமந்திரன் அணி சம்பந்தனின் இறுதிக்கிரியை தொடர்பான அனைத்து விடயங்களையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டதால் அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்பது தமிழரசுக்கட்சியினரிலேயே பெருமளவானோருக்கு தெரிந்திருக்கவில்லை. அதேவேளை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் முதல் வெளிநாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள் வரை சுமந்திரனுடனும் அவரது வலது-கரமாக இரா.சாணக்கியனுடனுமே தொடர்பு கொண்டவாறு இருந்தனர். சம்பந்தனின் இறுதிக்கிரியைகளில் இறுதிவரை தமிழரசுக்கட்சியின் தலைமை நாமே என்ற கோதாவில் செயற்பட்ட சுமந்திரன் அணி தற்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் பதவியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பார்க்கின்றது"***

**------------------------------------------------------- - கே. பாலா**



இலங்கை தமிழரசுக்கட்சியின் பெரும் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் இலங்கைத்தமிழர் அரசியலில் மூத்த ,பழுத்த அரசியல்வாதியும் இலங்கையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தன் அமரராகி இரு வாரங்களாகிவிட்ட நிலையில் அவரது மரணத்திலும் அரசியல் நடத்தும் அவலம் இலங்கை தமிழரசுக்கட்சியில் ஏற்பட்டுள்ளதுடன் தமிழரசுக்கட்சியை முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சுமந்திரன் அணி தீவிரமாகவும் தந்திரமாகவும் களமிறங்கியுள்ளது.

தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோல்விகண்ட நிலையில் அடிபட்ட பாம்பாக சுற்றுத்திரிந்த சுமந்திரனும் அவரது அணியினரும் "அண்ணன் எப்ப சாவான் திண்ணை எப்போது காலியாகும்" எனக்காத்திருந்த நிலையில்தான் சம்பந்தனின் மரணச்செய்தி வெளியானது. சம்பந்தனின் இந்த மரணச்செய்தியுடன் இலங்கை தமிழரசுக்கட்சிக்கும் "பாடை"கட்டும் நடவடிக்கையில் இறங்கிய இந்த அணி அந்த முயற்சியில் வெற்றி கண்டும் வருகின்றது.

சம்பந்தனின் மரணச் செய்தியுடன் தமது ஆட்டத்தை தொடங்கிய இந்த அணியினர் முதலில் சம்பந்தனின் "மரணச்சடங்கு" காரியத்தை கையில் எடுத்தனர். சம்பந்தனின் மரணச்சடங்கில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இன்னொரு அணியான ஸ்ரீதரனின் வகிபாகம் இருந்துவிடக்கூடாது என்பதில் தீவிர கவனம் எடுத்த சுமந்திரன் அணி சம்பந்தனின் உடல் அக்கினியுடன் சங்கமமாகும் வரை சம்பந்தனின் உடலுடன் சங்கமித்தே இருந்தனர். இதனால் இலங்கை தமிழரசுக்கட்சியின் தற்போதைய தலைவரான மாவை சேனாதிராஜா, ஸ்ரீதரன் முதல் தமிழரசுக்கட்சியின் உண்மையான விசுவாசிகள் வரை வெறும் பார்வையாளர்களாக வந்து சம்பந்தனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தவேண்டிய நிலைமையை இந்த அணி ஏற்படுத்தியிருந்தது.

சம்பந்தனின் உயிர் பிரிந்தவுடனேயே சுமந்திரன் அணி சம்பந்தனின் இறுதிக்கிரியை தொடர்பான அனைத்து விடயங்களையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டதால் அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்பது தமிழரசுக்கட்சியினரிலேயே பெருமளவானோருக்கு தெரிந்திருக்க வில்லை. அதேவேளை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் முதல் வெளிநாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள்வரை சுமந்திரனுடனும் அவரது வலதுகரமாக இரா.சாணக்கியனுடனுமே தொடர்பு கொண்டவாறு இருந்தனர். மாவை, சேனாதிராஜா, ஸ்ரீதரனை எவருமே அணுகவில்லை.

இவ்வாறான நிலையில் கொழும்பு பொரளை மலர்ச் சாலையிலும் பின்னர் பாராளுமன்றத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட சம்பந்தனின் உடலை அவரது சொந்த ஊரான திருகோணமலைக்கு கொண்டு செல்ல முன்னர் கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் ஸ்ரீதரனால் சுமந்திரன் அணியிடம் விடுக்கப்பட்டு முதலில் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் ஸ்ரீதரனால் "சம்பந்தனின் உடல் கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்" என்ற செய்தி ஊடகங்களுக்கும் வழங்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் திடீரென ஸ்ரீதரனின் இந்த வேண்டுகோளை நிராகரித்த சுமந்திரன் அணி, சம்பந்தனின் உடல் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவரங்கத்தில் மட்டுமே அஞ்சலிக்காக வைக்கப்படும் என்ற அறிவிப்பை விடுத்தது. அவ்வாறானால் சம்பந்தனின் உடலை தரை வழியாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அப்போது தமிழர் பகுதிகளில் மக்கள் அவருக்கு வழி நெடுகிலும் அஞ்சலி செலுத்தக்கூடியதாக இருக்கும் என்ற ஆலோசனை கூறப்பட்ட போதிலும் அதனையும் நிராகரித்த சுமந்திரன் அணி சம்பந்தனின் உடலை விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு சென்று அஞ்சலிக்கு வைத்து விட்டு பின்னர் அங்கிருந்து விமானம் மூலமே திருகோணமலைக்கும் எடுத்துச் சென்றது.

இவ்வாறு சம்பந்தனின் இறுதிச்சடங்கில் இறுதிவரை ஸ்ரீதரன் அணியினரை சம்பந்தனின் இறுதிக்கிரியை காரியத்தில் நெருங்கவிடாது பார்த்துக் கொண்ட சுமந்திரன் அணிக்கு பலம் சேர்க்கும் வகையில் சம்பந்தனின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற ஆசனத்துக்கு சுமந்திரனின் விசுவாசியான குகதாசன் நியமிக்கப்பட்டுவிட்ட நிலையில் பாராளுமன்றத்திலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட சுமந்திரன் அணி தயாராகி விட்டது. அதன் விளைவாகவே தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிக்க விடுக்கப்பட்ட வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை பொறுத்தவரையில் அதில் அங்கம் வகிக்கும் கட்சிகள், கூட்டணிக்கட்சிகள் தமது சார்பில் பாராளுமன்றக்குழுத் தலைவராக ஒருவரை நியமிக்கும். இந்தக்குழுவின் தலைவர்தான் பாராளுமன்ற விடயங்கள் தொடர்பில் இடம்பெறும் கூட்டங்கள், சந்திப்புக்கள், விவாதங்களில் தமது கட்சி உறுப்பினர்களுக்கான நேர ஒதுக்கீடுகள் போன்றவற்றை தீர்மானிப்பார். அந்தவகையில் ஜே.வி.பி.யின் பாராளுமன்றக் குழுத்தலைவராக அனுரகுமார திஸாநாயக்கவும் ஐக்கியமக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழுத்தலைவராக சஜித் பிரேமதாசவும் தமிழ்தேசியயக்கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராக இரா.சம்பந்தனும் இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் சம்பந்தன் அமரராகிவிட்டதனால் தமிழ்தேசியயக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுத்தலைவர் பதவியும் வெற்றிடமாகியுள்ளது. இதனால் அந்தப் பதவிக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றாகவிருந்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலந்தனை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏனைய பங்காளிக்கட்சிகளின் தலைவர்களினால் விடுக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் பதவி வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் கடந்த புதன்கிழமை பிற்பகல் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்க்த கலந்துரையாடலில் தமிழ் மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் (புளொட்) சித்தார்த்தனை தவிர ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துக் கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரான செல்வம் அடைக்கலநாதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராக நியமிக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இதனை வெளிப்படையாக எவரும் எதிர்க்காத போதும் செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட பங்காளிக் கட்சிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி டி.என்.எ என்ற கட்சியை பதிவு செய்திருப்பதால் செல்வம் அடைக்கல நாதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராக நியமிப்பதில் சட்ட சிக்கல் இருப்பதாக சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

எனினும் தற்போது இலங்கை தமிழரசுக்கட்சிகுள்ளும் மற்றும் தமிழ் தேசியக்கூட்டமைப்புடனும் உள்ள முரண்பாடுகள் தொடர்பில் கடும் விமர்சனங்கள், விசனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதன் மூலம் இவ்வாறான விமர்சனங்களையும் விசனங்களையும் ஓரளவுக்கு தணிக்கலாம் என்ற கருத்து ஸ்ரீதரனால் முன்வைக்கப்பட்டபோதும் அதனை ஏற்கும் நிலையில் சுமந்திரன் தரப்பு இருக்கவில்லை. செலவம் அடைக்கலநாதனை நியமிப்பதென்றால் அவர் டி.என்.ஏ. என்ற மாற்றுக் கட்சியிலிருந்து வெளியேறிவர வேண்டும் என்ற வகையில் நிபந்தனை விதிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் ஒவ்வொரு கட்சித் தலைவர்களும் தமது கட்சியின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் ஒரு இறுதி தீர்மானத்துக்கு வருவதாக குறிப்பிட்டு இறுதி தீர்மானம் எட்டப்படாத நிலையில் கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவர் சம்பந்தன் செயற்பட முடியாத் தலைவராக முடங்கியபோது "எனது சார்பில் இனிமேல் என் சார்ந்த அனைத்து விடயங்களில் எம்.ஏ. சுமந்திரன் அவர்களே பங்கேற்பார்கள்" என சகல தரப்புக்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் பதவியும் வெற்றிடமாகி இலங்கை தமிழரசுக்கட்சிபோல் தலைவர் இல்லாது இருப்பதனால் சுமந்திரன் தான் தலைவர் ஒருவர் நியமிக்கப்படும் வரை பாராளுமன்ற அலுவல்களையும் கையாளப்போகின்றார்.

ஏற்கனவே தமிழ் அரசியல் கட்சிகளில் தாய்க் கட்சி என அழைக்கப்படும் இலங்கை தமிழரசுக்கட்சி "தலைவர்" இல்லாத கட்சியாக தத்தளித்து எடுப்பார் கைப்பிள்ளையாக மாறி சுமந்திரன் அணியின் கட்டுப்பாட்டுக்குள் சென்று கொண்டிருக்கும் நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியும் வெற்றிடமாகி நிரப்பப்பட முடியாமல் அல்லது நிரப்ப விடப்படாமல் இருப்பதால் அதுவும் சுமந்திரனின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே செல்லப்போகின்றது. ஒட்டு மொத்தத்தில் தமிழினம் இன்று தம்மை வழிநடத்த "தலைவன்" இல்லாத ஓரினமாகவே மாறிப்போயுள்ளது.



# Canada Day Celebrations Hosted BY Scarborough Agincourt MPP Aris Babikian

கனடிய செய்திகள் Canadian News

## ஸ்காபுறோ அஜின்கோர்ட் – மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் நடத்திய கனடா தின வைபவம்




ரொறன்ரோ நகரில் வாழும் தமிழ் மக்களின் நெருங்கிய நண்பரும் ஆதரசவாளரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது பிரச்சனைகளுக்காக குரல் கொடுத்து வருபவருமான ஸ்காபுறோ அஜின்கோர்ட் - மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் நடத்திய கனடா தின வைபவம் கனடா தினமான யுலை 1ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெற்றது.

பெருந்திரளான ஆதரவாளர்கள் மற்றும் தொகுதி வாழ் பொது மக்கள் நூற்றுக்கணக்கில் கலந்து சிறப்பித்தார்கள்.

பல்வேறு இனங்கள் சார்ந்த கலைஞர்களின் நடனங்கள் பாடல் நிகழ்ச்சிகள் மற்றும் நகரசபை உறுப்பினர் நிக் மெண்டஸ் அவர்களின் உரை என பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பல தமிழ் அன்பர்களும் கலந்து கொண்டு கனடா தேசத்தின் பெருமைகளைப் பற்றி அங்கு உரையாற்றியவர்களின் கருத்துக்களை செவிமடுத்து இல்லம் ஏகினர்.








## கனடா – கந்தர்மடம் ஒன்றியத்தின் வருடாந்த கோடை கால ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெற்றது




அதிக அங்கத்தவர்களைக் கொண்டு கடந்த பல வருடங்களாக இயங்கிவருகின்ற கனடா - கந்தர்மடம் ஒன்றியத்தின் வருடாந்த கோடை கால ஒன்றுகூடல் அண்மையில் ஸ்காபுறோ தொம்சன் பூங்காவில் (THOMSON PARK) சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் மற்றும் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என பலர் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் சகிதம் அங்கு கலந்து கொண்டனர்.

பொழுது போக்கு அம்சங்கள் மற்றும் காலை மதிய உணவு பரிமாறல் ஆகியனவும் அங்கு இடம்பெற்றன.

கலந்து கொண்ட அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அன்றைய நாளை அழகிய பூங்கா ஒன்றில் களித்து இல்லம் ஏகினர்.

ஒன்று கூடல் சிறப்பாக நடைபெற ஒன்றியத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் சிறப்பான ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.





# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோத்ஸவ திருநாட்களில் நடைபெறும் விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்

## 14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை

**07.07.2024 ஞாயிற்றுக்கிழமை – சமயதீட்சை**

காலை 7:45 மணி முதல் 11:00 மணி வரை அடியார்களுக்கு "சமயதீட்சை" வழங்கப்படும்.

**12.07.2024 வெள்ளிக்கிழமை – மாலை**

விக்னேஸ்வரபூஜை, அனுக்ஞை, கணபதி ஹோமம், சங்காபிஷேகம்.

**13.07.2024 சனிக்கிழமை**

வாஸ்துசாந்தி நடைபெறும்.

14.07.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 7:45 மணி முதல் விக்னேஸ்வரபூஜை, கும்பபூஜை, ஹோமம், அபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை. காலை 10:00 மணிக்கு விஷேட பூஜை. காலை 11:00 மணிக்கு வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கணபதிதாளம், வேத, கீத, ஸ்தோத்திர, திருமுறை உபசாரங்கள் தொடர்ந்து நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி, விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் என்பன நடைபெறும்.

**காலை**

| | |
|---|---|
| 7:45 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 10:00 மணிக்கு | விசேடபூஜை |
| 11:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் |

**மாலை**

| | |
|---|---|
| 4:00 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 6:00 மணிக்கு | சாயரட்சைப்பூஜை |
| 7:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கலைநிகழ்ச்சி தொடர்ந்து விபூதி பிரசாதம் வழங்கல் |



**14.07.2024 ஞாயிறு – 1ம் நாள்**
ஓங்கார கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் தாளவாத்ய லயவின்யாசம்

**15.07.2024 திங்கள் – 2ம் நாள்**
மயூர கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வயலின் ஆராதனை

**16.07.2024 செவ்வாய் – 3ம் நாள்**
சூரியப்பிரபை வடிவக் காட்சி
கலைஞர்களின் வாத்ய ஆராதனை

**17.07.2024 புதன் – 4ம் நாள்**
வித்யா கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வீணை ஆராதனை

**18.07.2024 வியாழன் – 5ம் நாள்**
அனந்தசயன வடிவக் காட்சி
அந்தணர்களின் வேதபாராயணம்

**19.07.2024 வெள்ளி – 6ம் நாள்**
சிவலிங்கபூஜை வடிவக் காட்சி
கைலாச வாகன அலங்காரக் காட்சி

**20.07.2024 சனி – 7ம் நாள்**
நர்த்தன கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் நடன சமர்ப்பணம்

**21.07.2024 ஞாயிறு – 8ம் நாள்**
கப்பல் திருவிழா
கப்பல் வடிவ அலங்காரக் காட்சி

**22.07.2024 திங்கள் – 9ம் நாள்**
சங்கீத கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை இசை ஆராதனை

**23.07.2024 செவ்வாய் – 10ம் நாள்**
திருமஞ்சத் திருக்காட்சி
அழகிய மஞ்ச அலங்காரக் காட்சி

**24.07.2024 புதன் – 11ம் நாள்**
நம்பியாண்டார் நம்பி திருமுறை
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகம், திருமுறை பாராயணம்

**25.07.2024 வியாழன் – 12ம் நாள்**
மாம்பழத் திருவிழா
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகமாக வழங்கப்படும்


**26.07.2024 வெள்ளி – 13ம் நாள்**
சப்பற அலங்காரக் காட்சி
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு

**27.07.2024 சனி – 14ம் நாள்**
தேர் அலங்காரக்காட்சி

**28.07.2024 ஞாயிறு – 15ம் நாள்**
தீர்த்தத் திருநாள்
காலை: விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜை
மாலை: திருவூஞ்சல்

**29.07.2024 திங்கள்**
பூங்காவனம்
சங்கீத இசை நிகழ்ச்சி

**30.07.2024 செவ்வாய்**
வைரவர் மடை
காலை: பிராயச்சித்த அபிஷேகம், மாலை: வைரவர் மடை



விரத காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறவிருக்கும் அலங்கார உபசார பூஜை வழிபாடுகளில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Aadi Amavasai Viratham**
ஆடி அமாவாசை விரதம்
(பிதிர்தர்ப்பணம்)
03.08.2024 சனிக்கிழமை

**Aadipoora Viratham**
ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா
06.08.2024 வியாழக்கிழமை

**Varaluxmi Viratham**
வரலட்சுமி விரதம்
(சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
16.08.2024 வெள்ளிக்கிழமை



## அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர்



1.416.291.8500 www.vinaayagar.com vinaayagar@gmail.com vinaayagar

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் கருங்கல் திருக்கோவில்
# சங்குஸ்தாபன மஹோற்ஸவம்
## அடிக்கல்நாட்டு விழா

**JULY 12, வெள்ளி முதல் JULY 28 ஞாயிறு வரை**

## விநாயகர் ப்ரம்மோற்ஸவ தினங்களில் தினமும்

**காலை 11:00 மணிமுதல் 1:00 மணிவரை**
ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல் ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பங்குகொள்ளலாம்.



கருங்கல் திருக்கோவில் ஸ்தபதியார்
"சிற்பக்கலையரசன்" திரு. சரவணமுத்து ஜெயராஜா
"சிற்பக்கலாரத்தினம்" திரு. சக்திவிநாயகம்

குறிப்பிட்ட தினத்தில் அடியார்கள் பலர் வேலை-பாடசாலை காரணமாகக் குடும்பமாக குழந்தைகளுடன் சேர்ந்து சங்குஸ்தாபன வைபவத்தில் கலந்துகொள்ள முடியவில்லை என்பதாலும், வாழ்நாளில் கிடைக்கப்பெறாத அரிய சந்தர்ப்பத்தில் தமது திருக்கரத்தினால் ஆலயத்திற்கான சங்குகளை ஸ்தாபித்து இச்சிறந்த திருப்பணியில் இணைந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கமைவாகவும் தொடர்ந்து 28.07.2024 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறுகின்ற விநாயகர் மஹோத்ஸவ காலத்தில் தினமும் காலை 11:00 மணிமுதல் 1:00 மணிவரை அடியார்கள் சங்குஸ்தாபன வைபவத்தில் பங்குபற்றுவதற்குரிய ஏற்பாடுகள் ஆலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**அனைவரும் குடும்பசகிதமாக வருகை தந்து சங்குஸ்தாபன அடிக்கல்நாட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

**ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோற்ஸவ திருநாட்களில் நடைபெறும்**
**விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்**
**14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை**
**தினமும் காலை, மாலை சிறப்பாக நடைபெவுள்ளது.**



"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை.
ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

3025 Kennedy Rd, Unit 10,
Scarborough ON M1V1S3

1.416.291.8500
www.vinaayagar.com
vinaayagar

# SAME BREW A LEGENDARY ROAR

**SINHA beer, your beloved brew, continues to reign supreme, honouring its iconic LION identity, the name by which it is recognised worldwide.**

If you've ever indulged in the inimitable flavour of Sinha Stout, you've likely been captivated by its unique taste. While retaining its unique character, Sinha is now poised to embrace its original identity as Lion, the name that conquered the hearts of beer afficionados around the world. Lion Stout will remain the same signature brew you've come to know and love as Sinha.

Originating from the island of Ceylon, known for its legendary folklore, the legacy of the Lion roared into life in 1881. Unleashing its distinctly bold flavour through time-honoured recipes, the daring taste of Lion made its mark and became a revered name in the island. In 1998, the Lion ventured into uncharted territories, crossing borders to establish its rightful dominion in over 19 countries, triumphing over the palates of beer enthusiasts worldwide.

Today, Lion Brewery stands as a testament to the enduring legacy of time, steeped in tradition, and a relentless commitment to crafting beers that pack a punch. Skillfully fusing age-old recipes with state-of-the-art brewing techniques, Lion will continue its reign of dominance in Canada, bringing you a flavour that transcends generations.

**ONLY** STOUT IN ASIA TO BE LISTED IN 300 BEERS TO TRY BY ROGER PROTZ

**ONLY** BEER IN THE WORLD ENDORSED BY MICHAEL JACKSON THE LEGENDARY BEER WRITER

99/100 ratebeer

AVAILABLE IN 473ML CANS AT

LCBO — LCBO.COM

BEER STORE — THEBEERSTORE.CA

FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020 OR
EMAIL FRED@FINEBEERS.CA




# கனடா பீல் பிரதேச சொப்கா மன்றத்தின் 15வது ஆண்டுவிழா

- குரு அரவிந்தன்



யூலை மாதம் 6 ஆம் திகதி கனடாவின் பீல் பிரதேசத்தில் உள்ள சொப்கா குடும்ப மன்றத்தினர் தமது 15வது ஆண்டு விழாவை மிசசாகாவில் ஸ்ரிவ்பாங் வீதியில் உள்ள அனாபில்ஸ் மண்டபத்தில் சிறப்பாக நடத்தினார்கள். மங்கள விளக்கேற்றி, அகவணக்கமும் அதைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா பண் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து வரவேற்புரையும் அதன் பின் மன்றத் தலைவர் யாழினி விஜயகுமாரின் உரையும் இடம் பெற்றன. இந்தவிழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் அவர் தனது உரையில் நன்றியைத் தெரிவித்திருந்தார்.

இந்த விழாவின் பிரமத விருந்தினராகக் கனடா காவல்துறை பெண் அதிகாரியான




ஏவா ரட்ணகுமார் கலந்து கொண்டார். இளைய தலைமுறையினருக்கு ஏற்றவகையில் ஒழுக்கம், கட்டுப்பாடு சார்ந்து அறிவூட்டும் வகையில் அவரது உரை இடம் பெற்றிருந்தது. அடுத்து ஈசாபரா ஈசானந்தாவின் உரை இடம் பெற்றது.

அடுத்து இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ரொறன்ரோ கல்விச் சபையைச் சேர்ந்த அனு சிறீஸ்கந்தராஜாவின் உரை இடம் பெற்றது. அவரது உரை இளைய தலைமுறையினரின் கல்வி சார்ந்ததாக அமைந்திருந்தது. எனது 25 வருடகால ரொறன்ரோ கல்விச்சபை ஆசிரியர் பணியைப் பாராட்டி ரொறன்ரோ கல்விச்சபை பாராட்டுப் பத்திரம் வழங்கிய போது அவர்தான் அப்போது அதை மேடையில் வைத்து வழங்கி என்னைக் கௌரவித்திருந்தார்.



இந்த மன்றத்தின் முன்நாள் தலைவராகவும், தற்போது காப்பாளராகவும் நான் இருப்பதால் இளைய தலைமுறையினருக்கு உரையாற்றும்படி கேட்டிருந்தனர். நான் எனது உரையில், "சொப்கா மன்றத்தின் இந்த ஆண்டு விழாவை இளைய-தலைமுறையினர் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்துவதையிட்டுப் பெருமையாக இருக்கின்றது. 15 வருடங்களுக்கு முன் சிறுவர் சி-றுமிகளாக இருந்தவர்கள் இன்று நிர்வாகக்குழுவில் அங்கம் வகித்து தமிழ் மொழியில் நிகழ்ச்சிகளை நடத்துவது பெருமைக்குரியது. புலம் பெயர்ந்த கனடிய மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்காது என்று சொன்னவர்கள் இந்த நிகழ்வைக் கட்டாயம் பார்க்க வேண்டும். இங்கே பிறந்து வளர்ந்த மன்றத்தின் இளைய தலைமுறையினர் தமிழில் உரையாடி





இந்த நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்துவதையிட்டு எல்லோருக்கும் பெருமையாக இருக்கின்றது. இளைய தலைமுறையினரிடம் எங்கள் மொழியைக் கொண்டு சேர்ப்பதில் நாங்கள் எடுத்த முயற்சி வீண்போகவில்லை என்பதை நேரடியாக இங்கே பார்க்கும் போது எமக்குப் பெருமையாக இருக்கின்றது." என்று உரையின் போது குறிப்பிட்டிருந்தேன்.

தொடர்ந்து வீணை இசை, திரைப்படப் பாடல், சிறுவர் நாடகம், சிறுமிகள் நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து நன்றி உரை இடம் பெற்றது. சென்ற வருடம் நடந்த சொப்கா விழாவில் எனது நூல்களை விற்பனை செய்து அதில் கிடைத்த பணத்தை மருத்துவ மனைக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தோம். அதேபோல நடைபயணம் மேற்கொண்டு அதில் சேகரித்த பணத்தை மருத்துவ மனையில் நோயாளர் தங்கும் ஒரு அறையைப்பராமரிப்தற்கான செலவையும் கொடுத்திருந்தோம். இரத்தானம், உணவு வங்கிக்கு உணவு சேகரித்துக் கொடுத்தல், பூங்கா துப்புரவு செய்தல், முதியோர்களுக்கான பயிற்சிப் பட்டறை, தமிழ் மொழி வகுப்புகள் போன்றவற்றையும் சொப்கா மன்றத்தினர் செய்து வருகின்றனர்.




# 20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
CR102, CR 247, CR238, CR121,CR141,CR160, CR 31, CR 42, CR 39, CR 52, CR 78, CR 115

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :

Tel : 416-291-CASH (2274)

Fax : 416-291-2276

E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca



4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "வன்னி புதைகுழியின் எலும்புகள் காணாமல் போனவர்களுடையதா?" காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகம் சந்தேகம்

**- நடராசா லோகதயாளன்**

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் சட்டவிரோதமாக புதைக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்கள் என விஞ்ஞான ரீதியில் அனுமானிக்கப்பட்ட பாரிய புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எச்சங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடையதா? என்பதை கண்டறிய காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் முயற்சித்து வருகின்றார்.

கொக்குத்தொடுவாய் பாரிய வெகுஜன புதைகுழியின் நான்காம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்கு மறுநாள் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) தவிசாளர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த பிரதேச ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

"காணாமல் போனவர்களின் தலைவிதியை மிக உயர்ந்த தரத்திற்கு அமைய கண்டறிவதோடு, இது வரையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள காணாமல் போனவர்களுக்கும், கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதை கண்டறிய எதிர்பார்க்கின்றோம்."

தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவ, சில மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு நீதிமன்றில் கையளித்த 35 பக்க இடைக்கால அறிக்கையில், கொக்குத்தொடுவாய் பாரிய புதைகுழியில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட சடலங்கள் 1994-1996ற்கு இடைப்பட்ட காலத்தில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் புதைக்கப்பட்டவை என அனுமானித்திருந்தார்.

முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவவின் பங்களிப்புடன் 2023 செப்டெம்பர் முதல் நவம்பர் வரையிலான 21 நாட்களில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் பின்னர் எடுக்கப்பட்ட 40 ஆண் மற்றும் பெண் எலும்புக்கூடுகளின் பிரதான அனுமானத்தின் அடிப்படையில், எலும்புக்கூடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளுடையது எனவும், அவை இரகசியமாக புதைக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கையில், பாதிக்கப்பட்டவர்கள் உயிரிழக்கும் முன்னர் துப்பாக்கிச் சண்டையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது எனவும், இந்த போராளிகள் 1994ஆம் ஆண்டுக்கு முன்னர் அல்லது 1996ஆம் ஆண்டுக்கு பின்னர் புதைக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த எலும்புக்கூடுகள் காணாமல் போனவர்களுடையதா என்பதை அறிய முயற்சிக்கும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகே' கட்டுலந்த, கொக்குதொடுவாய், இலங்கையில் சர்வதேச தர நடைமுறையை பின்பற்றி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் முதல் வெகுஜன புதைகுழி என சுட்டிக்காட்டுவதோடு, அவர் அதை ஒரு "தனித்துவமான மைல்கல்" எனவும் குறிப்பிடுகின்றார்.

"அண்மையில் நாங்கள் ஒரு நிலையான செயல்பாட்டு நடைமுறையை நிறுவியுள்ளோம்.

இந்த தரத்திலான செயல்பாட்டு நடைமுறையை நாங்கள் பயன்படுத்தும் முதல் வெகுஜன புதைகுழி இதுதான். மேலும், சுமார் 12 தொழில்முறை பங்குதாரர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். உண்மையில், இந்த செயல்முறையானது இலங்கையின் அகழ்வு செயற்பாட்டு நடைமுறைகளில் இலங்கை நிபுணர்களால் சர்வதேச தரங்களைப் பயன்படுத்துவது தொடர்பான ஒரு தனித்துவமான மைல்கல்லாக இருக்கும்."

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தலையிட்டு நிதி வசதிகளை வழங்கினாலும் அகழ்வு பணிகள் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

"நிதியுதவிக்காக நீதி அமைச்சின் ஊடாக இதில் ஈடுபட்டுள்ளோம். முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினூடாக இதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதற்காக மாவட்டச் செயலாளர் சிறப்பாக செயற்பட்டு வருகின்றார். இதற்கு நீதி அமைச்சின் செயலாளரும், நீதி அமைச்சரும் பொது நிதி ஒதுக்கீட்டின் ஊடாக பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். எனினும், இந்த அகழ்வுகள் மிகவும் சுயாதீனமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன."



## இராணுவத்திடமும் தகவல் கோரப்படும்

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிகள் அமைந்துள்ள பகுதி 1984 முதல் 2012 வரை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன், பாரிய புதைகுழிகள் காணப்படும் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்திருக்குமானால் அவர்களிடமிருந்தும் தகவல் கோரப்படும் எனக் குறிப்பிட்டார்.

"தனியே ஒரு தரப்பிடம் மாத்திரமல்ல. பல்வேறு காலப்பகுதிகளில், பல்வேறு அரச தரப்புகள் மற்றும் தனிநபர்களின் ஆளுகைக்குள் இந்த பகுதி இருந்துள்ளது. இதுத் தொடர்பில் இராணுவத்திடமோ, ஏனைய ஆயுதக் குழுக்களில் இருந்து விலகி புனர்வாழ்வு பெற்றுள்ள தரப்பிடமோ நாங்கள் தரவுகளை சேகரிக்கும் பணிகளை எங்களது பல்வேறு பிரிவுகள் தரவுகளை சேகரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதுத் தொடர்பிலான அறிக்கைகள் அடுத்து வரும் காலப்பகுதியில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும். அந்த அறிக்கைகளை மாத்திரம் தங்கியிருக்க முடியாது. பல்வேறு தரப்பினரின் அறிக்கைகள், நில அளவை படம், இந்த காணி தொடர்பிலான உரிமம். அதில் யார் யார் ஆக்கிரமித்திருந்தார்கள் போன்ற பல்வேறு விடயங்கள் இதில் தங்கியுள்ளன. இராணுவத்தரப்பும் இதில் ஒரு ஆளாக இருக்குமானால் இதுத் தொடர்பில் அவர்களிடம் இருந்தும் தரவுகள் கோரப்படும்."

2023 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில், கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் இருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில், நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, தற்செயலாக மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

# இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்னாள் ஊழியர்கள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், ஒன்று கூடலும் ஸ்காபுறோ நகரில், பிஞ்ச், நீல்சன் வீதி சந்திப்பில் அமைந்துள்ள, நீல்சன் பூங்காவில்,(NEEILSON PARK) எதிர் வரும் 14ம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) யூலை மாதம், 2024 காலை 09.00 மணிக்கு, போஷகர் திரு .ம.வசந்தமார் அவர்கள் ஒருங்கிணைப்பில், திரு.கந்தையா கௌரிநாதன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும்.

அன்றைய தினம் திரு ராஜ்குமார் இராசையா அவர்கள், (HOME LIFE /REALTY INC ) விற்பனை பிரதிநிதி பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கின்றார்.

பொழுது போக்கு நிகழ்வாக, சிறுவர்கள், பெரியவர்களுக்கான விளையாட்டு போட்டி நடைபெற்று, பரிசில்கள் வழங்கப் படும்.

மதிய உணவு வழங்கப்படும்.

அன்றைய தினம் புதிய நிர்வாக சபை தெரிவும் நடை பெறும்.

ஆகவே இலங்கை போக்குவரத்து சபை முன்னாள் ஊழியர்கள், அனைவரும் தங்களது குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு.

தலைவர்.க.கௌரிநாதன்.

416 671 1084

செயலாளர். வே.மகேஸ்வரன்

514 240 1478

# மருத்துவப் பராமரிப்புப் பணித்துறையைப் பலப்படுத்த ஒன்ராறியோ மாகாண அரசு $10 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது

## அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவிப்பு




எமது மாகாணத்தில், மருத்துவப் பராமரிப்புப் பணித்துறையைப் பலப்படுத்த ஒன்ராறியோ மாகாண அரசு $10 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது.

ஊரகப் பகுதிகளிலும் தொலைதூர மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவில் 1,000க்கும் மேற்பட்ட மருத்துவ தாதியர்களின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு 10 மில்லியன் டொலர்களை அளிப்பதன் மூலம் ஒன்ராறியோ தனது சுகாதார அமைப்பை வலுப்படுத்துகிறது. இத்திட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இதன்மூலமாக 72 மருத்துவமனைகளிலுள்ள 400 இற்கும் மேற்பட்ட மருத்துவ தாதியர்கள் பயனடைந்துள்ளதுடன், மேலும் இவ்வாண்டில் 163 அவசர சிகிச்சை பிரிவுகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். "ஒன்ராறியோ வாழ் மக்களுக்கு வீட்டிற்கு அருகாமையிலேயே தீவிர சிகிச்சைக்கான வசதியை உறுதி செய்வதில் எங்கள் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது" என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

2018 முதல், அரசாங்கம் 80,000 புதிய தாதியர்களையும், 24,000 இற்கு அதிகமான தனிநபர் மருத்துவப் பராமிப்புப் பணியாளர்களையும் நியமித்துள்ளது. மேலும் 30,000 தாதியத்துறை மாணவர்கள் தற்போது ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்று வருகின்றனர். இந்த முதலீடு, சுகாதாரப் பணியாளர் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், திறன்களை மேம்படுத்துவதன் மூலம் பணியாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஒதுக்கப்படும் 743 மில்லியன் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது என்றார் அமைச்சர் விஜய் தணிகாசலம்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இன்னொரு சக்கர நாற்காலி



**"அரசியல் நீரோட்டத்தில் நிர்வாகத் திறன் கொண்டவர்கள், முகாமைத்துவ அறிவு கொண்டவர்கள், பன்மொழிப் புலமை கொண்டவர்கள், சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்கள், மக்களுக்காக பாடுபடுபவர்கள், மக்களின் துன்ப துயரங்களை அறிந்தவர்கள், காசுக்கு விலைபோகாதவர்கள் ஆகியோரே உள்ளீர்க்கப்பட வேண்டும்."**

------------------------------------------------------------ **- கே. பாலா**

**த**மிழ் மக்களின் உரிமைக்காக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் நடைபெற்று வந்தது. அந்தவகையில் தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டம் தற்போது இல்லாத போதிலும் தமிழ் மக்கள் மத்தியில் தற்போதும் தமது உரிமைக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டே வருகின்றன.

அந்தவகையில் ஆயுதப் போராட்டம் பலமாக இருந்த காலப்பகுதியில் அரசியல் ரீதியாக நாம் எமது உரிமைகளை பேரம்பேசி பெற்றுக் கொள்ளும் நோக்குடனும் சர்வதேச அரசியல் செயற்பாடுகளையும் கருத்தில் கொண்டு பல்வேறு கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. எனினும் ஆரம்பகாலத்தில் பல கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்டாலும் பின்னர் சிலர் பல்வேறு காரணங்களுக்காக விலகிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், தமிழ் மக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களுக்கான கட்சி என தொடர்ச்சியாக நம்பப்பட்டு வந்தது. எனினும், கட்சியில் இருந்த பலர் தமது சுயஇலாபத்திற்காகவும், அரசுக்கு முண்டுகொடுக்கும் முகமாகவும் செயற்பட்டு வந்தமையினால் பலர் கட்சியிலிருந்து விலகிச் சென்றதுடன் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான ஆதரவினை குறைத்து பிற கட்சிகளின் மீது நாட்டம் காட்டத் தொடங்கினார்.

ஆரம்ப காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்தல்களின் ஊடாக அதிக ஆசனங்களைக் கைப்பற்றி வந்தது. எனினும் காலப்போக்கில் அது படிப்படியாகக் குறைவடைந்து வந்துள்ளதுடன், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு கட்சி உறுப்பினர்கள் மட்டுமே காணப்படும் நிலைக்கு வந்துள்ளது.

ஒவ்வொரு கட்சிக்கும் என பல கொள்கைகள், விதிமுறைகள், கோட்பாடுகள், விழுமியங்கள் காணப்படுகின்றபோதிலும், தற்போதைய கால ஓட்டம் - தொழில்நுட்ப மாற்றம் - உலக நடப்பு என்பவற்றுக்கு ஏற்ப கட்சிகள் தமது கொள்கைகளைப் புறந்தள்ளிச் செயற்படுதல் வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவராக செயற்படுவோரில் பெரும்பகுதியினர் தற்போது வயது முதிர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களுக்கு அனுபவம் உள்ளது, அவர்களாலேயே சிறப்பாக செயற்பட முடியும் என சிலர் கூற முனையலாம். ஆனால் தற்போதைய தொழில்நுட்ப யுகத்தில் அனுபவசாலிகளைக் காட்டிலும் பல அறிவாளிகள் - மதிநுட்பவாதிகள் - தந்திரசாலிகள் காணப்படுகின்றார்கள் அவர்களையும் கட்சியில் இணைத்துக் கொண்டு பயணிப்பதே சாலச் சிறந்ததாகும்.

இதற்கென காணப்படும் கட்சிக் கொள்கைகளைப் புறந்தள்ளிவிட்ட காலத்தின் தேவைக்கேற்ப சிறந்த நபர்களை கட்சிக்குள் உள்வாங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இரா. சம்பந்தனால் கொண்டுவரப்பட்ட மதிநுட்ப வாதியான சுமந்திரன் தற்போது கூட்டமைப்பின் ஆரோக்கிய செயற்பாட்டுக்கு பொருத்தமற்றவராக காணப்படுவதுடன் ஒத்துக் போகும் தன்மையை கொண்டிராததுடன், தனது தந்திரங்கள் குறுக்குவழியில் பயன்படுத்தி கட்சியின் தலைமைத்துவத்தை தான் கைப்பற்றுவதற்காக போராடி வருகின்றார். இது கட்சிக்கோ அல்லது சமூகத்திற்கோ ஆரோக்கியம் அற்ற செயற்பாடாக காணப்படுகின்றது.

இப்படியானவர்களை புறந்தள்ளிவிட்டு தற்போது வடக்குக் கிழக்கில் உள்ள நிர்வாகத் திறன் கொண்டவர்கள், முகாமைத்துவ அறிவு கொண்டவர்கள், பன்மொழிப் புலமை கொண்டவர்கள், சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்கள், மக்களுக்காக பாடுபடுபவர்கள், மக்களின் துன்ப துயரங்களை அறிந்தவர்கள், காசுக்கு விலைபோகாதவர்கள் அரசியல் நீரோட்டத்திற்கு உள்ளீர்க்கப்பட வேண்டும்.

உண்மையில் வடக்குக் கிழக்கில் பல ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், முகாமைத்துவம் சார்ந்தவர்கள், பிரபல கணக்காளர்கள், எழுத்தாளர்கள் என பலர் தமது பதவிக் காலத்திலேயே சமூகத்தின் மீது அக்கறை கொண்டு செயற்பட்டு வந்துள்ளார்கள். அவ்வாறான நபர்களுக்கு இடம்கொடுப்பதன் மூலம் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம் - ஏற்படும்.

ஆனால் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்களை எல்லாம் பார்க்கும் போது அவை எவையும் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகளை இல்லாது செய்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜூன் 30 ஆம் திகதி இயற்கை எய்தினார். இவர் தனது இறுதிக் காலம் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்டு வந்துள்ளார். சம்பந்தன் தனது கடைசிக் காலத்தில் பாராளுமன்ற கூட்டத்தொடர்கள் பலவற்றில் கலந்து கொள்ளவில்லை. அவர் தனது உடல்நிலை காரணமாக இவ்வாறு செயற்படுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு எந்த அனுகூலங்களையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

இரா. சம்பந்தன் இயற்கை எய்திய பின்னர் அவரது இடத்திற்கு திருகோணமலையில் போட்டியிட்டு அடுத்த இடத்தைப் பெற்றுள்ள கதிரவேலு சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நீண்டகாலம் கனடாவிலேயே வசித்து வந்துள்ளார். 2020 ஆம் ஆண்டு முதல் இவர் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவராக செயற்பட்டு வருகின்றார். திருகோணமலை மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி ஒரு ஆசனத்தினை மட்டுமே பெற்றுக் கொண்டது. அதன் படி அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற இரா. சம்பந்தன் நாடாளுடன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு அடுத்த படியாக குகதாசன் 16,770 வாக்குகளைப் பெற்றிருந்தமையினால் சம்பந்தனின் இடத்திற்கு இவர் 02.07.2024 அன்று நியமிக்கப்பட்டதுடன் கடந்த 09.07.2024 அன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அத்துடன் நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்த பின்னர் அவர் தனது இருக்கைக்கு உதவியாளர் ஒருவரின் உதவியுடன் அழைத்துச் செல்லப்பட்ட போது தவறி விழுந்து விட்டார்.

இச் சம்பவத்தினை உற்றுநோக்கும் போது இரா. சம்பந்தன் அவர்களைத் தொடர்ந்து மீண்டும் ஒரு சக்கர நாற்காலியுடன் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு செல்லும் நிலை ஏற்படலாம். எனவே, தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு எப்பொழுதும் சக்கர நாற்காலியில் உறுப்பினர்களை அழைத்துச் செல்லும் போல் தெரிகின்றது.

இந் நிலை மாற்றப்பட வேண்டும். கடந்த 2022 ஆண் ஆண்டு காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டமானது இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. அதன்படி நாடாளுமன்றத்திற்கு செல்லும் உறுப்பினர்கள், அவர்களின் செயற்பாடுகள் என்பவற்றுடன் நாடாளுமன்றத்தில் இளமையான - துடிப்பான - அரசியல் அறிவு உடைய புதிய உறுப்பினர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதாகும்.



வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பு தமது எதிர்கால சந்ததியினர் சிறப்பாக வாழ்வதற்கு ஏற்ற சூழல் என்று ஏற்பட வேண்டும் என்பதாகும். ஏனெனில் நாம் கடந்து வந்த பாதை கடினமானது. எனவே அத்தகைய நிலை தமது எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படக் கூடாது என்பதாகும். இத்தகைய நிலை தோற்றம் பெற வேண்டுமாயின் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் சிறப்பாகவும் - ஆரோக்கியமாகவும் - மதிநுட்பமாகவும் செயற்பட வேண்டும் என்பதாகும். இதற்கு தற்போதைய கூட்டமைப்பின் செயற்பாடுகள் ஒருபோதும் பெருத்தமானது - போதுமானது அல்ல. எனவே, கூட்டமைப்புக்குள் புதிய இரத்தம் - நுட்பம் உட்பாச்சப்பட வேண்டும் என்பதாகும்.

அத்தகைய ஒரு சிறந்த காலம் விரைவில் ஏற்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இதற்கெல்லாம் எதிர்காலத்தில் இடம்பெறும் தேர்தல் தொடர்பான அறிவிப்பும் அதில் போட்டியிட உள்ள நபர்களின் தன்மையும் பதிலாக இருக்கும்.

மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதனைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதுடன் இதே நிலை தொடருமாக இருந்தால் வடக்கு கிழக்கு மக்கள், தமது புதிய தலைமைத்துவத்தை தெரிவுசெய்ய புதிய முறை - புதிய கட்சி - புதிய உறுப்பினர்களை தேர்வுசெய்ய ஆர்வம் காட்டுவதுடன் மட்டுமன்றி சாவகச்சேரி வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊழல், முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிராக அணிதிரண்டு போராடியது போன்று கூட்டமைப்புக்கு எதிராகவும் தமது போராட்டத்தை முன்னெடுப்பதை தடுக்கமுடியாது போகலாம்.

**சத்தியன் - கனடா**

## கனடாவில் நாம்
## (இணைக்குறள் ஆசிரியப்பா)

---------------------------

நாடு விட்டு நகரிழந்து வந்தோம்
பாடு பட்டு பணிகள் செய்தோம்
வீடுவாங்கி விருந்து வைத்தோம்
காடு பெற்றே கோவில் அமைத்தோம்
மோட்டார் வாங்கி முன்வீட் டார்க்கு
மாட்சி காட்டினோம்
செல்லா இடமெலாம் சென்றே
உல்லாசம் காண்கிறோம்
திருமணச் சடங்கை
திருவிழாப் போலவே செய்கிறோம்
பிறந்தநாள் விழாவை
பிறருக்குக் காட்ட பவிசாய்ச் செய்தோம்
பூப்புனித நீராட்டை பரியேற்றிச் செய்தே
ஆப்பிழுத்த குரங்கானோம்
மரணவீட்டை விட்டோமா?
சிரமப் பட்டேனும் சிறப்பாய்ச் செய்தோம்
வியாபாரம் விளம்பரம் செய்தே
உயரம் தொட்டோம்
முத்தான எங்கள் வருங்காலச் சந்ததிக்கு
சொத்தான எங்கள் தாய்மொழி தந்தோமா?
பதிபோன்ற பெற்றோர்க்கு என்ன செய்தோம்?
முதியோர் இல்லத்தில் மூச்சடங்க விட்டோம்
தாயகத்தில் வாழும் நமது சந்ததிக்கு
தயவு காட்டினோமா?
வாயளவில் என்றாலும் வாஞ்சை காட்டினோமா?

---------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198




# State Complicity in 2018 Digana Anti-Muslim Riots Exposed by Tamil Journalists

**- Siva Parameswaran**

Sri Lanka's top statutory rights watchdog has admitted its failure to release the findings of a probe into the state perpetuated riots against Muslims in the Ceylon Tea producing highlands six years ago.

The damning exposure was made by two Tamil journalists – both from the hill country - in their debut documentary "Six Years Since Digana Anti-Muslim Riots: Whither Justice?" showing the brutality of the concerted assault detailed by victims.

Now, the Human Rights Commission of Sri Lanka (HRCSL) has admitted it is yet to release the findings of the investigation report on the rioting, following the leader of Sri Lanka's largest Muslim party pledging to raise the issue in parliament after attending the screening in Colombo to mark the International Day in Support of Victims of Torture.

The documentary by Parthipan Shanmuganathan and Selvamani Sritharan has become the talk of the town after it uncovered credible evidence of state complicity in the atrocity.

Victims accused the state security forces directly of torturing them on camera in the documentary.

Shocking information was brought out by those affected about the gross injustice done to the Muslims when the current President Ranil Wickremesinghe was the Prime Minister at the time of the riots.

The violence in Kandy "appeared to be systematic anddd organized" Ranil Wickremesinghe said in the wake of the riots when he was the PM and pledged to "take stern action".

The documentary exposes the planned atrocities from the 4th of March 2018 by the state security forces in Digana and Theldeniya in the suburbs of Buddhist holy city of Kandy. Hundreds of Muslims lost their properties and livelihoods. Many houses and business outlets were burnt which dealt a crippling blow to the already marginalized and vulnerable people, apart from a young Muslim being killed.

'Continued intentional and organized hate crimes were perpetuated by the state' the documentary reveals.

The trilingual short documentary brings out the horrific testimonies of the relatives of the young man who was killed and those handicapped for life. The testimonies speak of the unspeakable atrocities perpetuated and the anguish that continues to be faced by the affected. The after-effects of the riots- physical and emotional still exist very much according to those who shared their nightmare.

Evidence presented in the documentary was so compelling it forced the HRCSL to come out with a statement while it remained tightlipped for six years.

HRCSL completed gathering evidence from those affected by the riots and the wave of atrocities, which began on the 4th night of March 2018, during the period May 9-12 of the same year.

The inquiries were held in Kandy under Dr Deepika Udagama then Chairman of the HRCSL. She has gone on record saying her findings would be made public in July the same year.

However, even after six years, the findings have not been made public by the HRCSL. But in a reply to the BBC, the state human rights body has said its findings would be published shortly.

Documentary producer Shanmuganathan Parthiban questions the rationale behind the silence of the HRCSL until the film was screened on the 27th of June this year, while he sought a reply in writing on the 18th of July 2023.

HRCSL has now acknowledged its role in denying truth and justice to victims of an anti-Muslim riot that rocked the Ceylon Tea-producing highlands six years ago.

While the Sri Lanka rights body did not respond to emails by the local based independent Tamil journalists, it had been quick to reply when the BBC sought it.

Kandy district Parliamentarian and leader of the Sri Lanka Muslim Congress (SLMC), Rauf Hakeem present at the screening says he will raise the issue in the parliament. He was visibly shocked at the evidence. Speaking at a discussion after the screening in Colombo Rauf Hakeem was critical of the HRCSL.

"Until people without political influence are appointed to Sri Lanka's independent bodies it would be difficult to render justice".

Also participating in the discussion after the screening, international award winning disappearance victim rights activist Sandya Ekneligoda said international intervention is a must to get justice for crimes perpetuated by the state. Her husband-senior journalist and cartoonist-Prageeth Ekneligoda was abducted from the Colombo suburbs on January 24th, 2010, and remains untraced. Sandhya has been continuously fighting courageously to find the truth about her husband.

"There is no other way for those affected except to seek international intervention to know the truth".

Father Gerard Jayawardane of the 'Kithusara' organization appealed to the Tamil, Muslim, and Sinhala people to jointly fight for justice rather than individually fighting for it. He emphasized this after seeing the documentary.

The then government ministers were accused by the eyewitnesses who spoke in the documentary of not taking timely and appropriate action to stop the violence against the Muslims and backing the state security forces who supported armed Sinhala thugs.

A video clip in the documentary shows Special Task Force (STF) members assaulting Muslim clerics. It had been recorded at 4:59 PM on the 5th of March at the Digana Hijirapura Jumma Mosque, according to the independent media organization Journalists for Democracy in Sri Lanka (JDS).

Inaction on the part of the government regarding the state security forces who perpetrated the attacks against Muslims has also drawn the attention of the UN.

The chairman of the HRCSL has gone on record their investigations for three days in Kandy focused 'only on the role played of the state officials'. However, the said investigation report by the HRCSL has not been made public, thereby keeping the public in the dark about the contents.

HRCSL-an affiliate of the UN Human Rights Council was downgraded by the Global Alliance of National Human Rights Institutions (GANHRI) in 2021 only to be upgraded again after six years and two months since the state-sponsored riots against the Muslims.

While the riots against the upcountry Muslims are being spoken publicly on political platforms, nothing has come into the public domain about what happened into the investigation and what the senior officers of the elite STF had told them.

## Geneva report



A hard-hitting report on Sri Lanka about freedom of religion or belief submitted at the 43rd session of the UN Human Rights Council by Dr. Ahmed Shaheed said, apart from one being killed, more than 400 properties, mosques, and vehicles were destroyed during the three days of riots.

The report also said while many officials were arrested, politicians were later released. Adding insult to injury, the senior police officer who was in charge of the Central Province during the riots against the upcountry Muslims, was promoted and nominated to a higher post in 2020.

The most senior officer in charge of law and order in Kandy district, when the violence against the Muslims in Digana unleashed, was appointed as ombudsman to "look into the public complaints and conduct inquiries and offer a fast track solution".

In a statement on the ombudsmen's appointment in 2020, the President's secretariat said, "the purpose of establishing this Ombudsman's office is to find out if the government officials have exceeded their powers or acted in an extra-judicial manner and to look into if the public faced any misery or difficulties and suggest remedies".

A Buddhist monk involved in the riots and the wife of an accused - Amit Weerasinghe who was on bail on violence-related charges – alleged that they were invited to Digana by the Deputy Inspector General of Police S.M Wickremesinghe. This hasn't been denied so far.

"It was the Kandy DIG who asked Amit Weerasinghe to come here at this time and got him trapped in this," his wife Jayangani Sithum Kumari told the media in 2018. Buddhist monk Ampitiye Sumanaratna Thero who was there when the riots started had confirmed it was the Senior DIG S.M. Wickremesinghe who brought the persons involved in the riots.

## Facebook 'apology'

In 2020 Facebook tendered an apology for the usage of its platform to spread hate against the Muslims in Sri Lanka.

The apology from Facebook came after an internal investigation which found usage of its platform for spreading hate could also be a reason for the riots which shattered the Muslims in Sri Lanka and promoted hatred against them.

The posts on the social media platform about the violence in Digana and Theldeniya in 2018 instigated hatred against the Muslims. Following this the government clamped emergency regulations and temporarily halted access to Facebook.

An inquiry regarding the riots and the violence said the posts on Facebook might have led to the violence against the Muslims. A statement released by Facebook on the 12th of May 2020 said "We deplore the misuse of our platform".

Their statement further added, "We recognize, and apologize for, the very real human rights impacts that resulted."

## Lip service at last

After the journalist duo's documentary exposed state complicity in the riots, violence, and loss of property and lives, HRSCL Commissioner Dr. Gehan Gunatilake now says their report is being finalized and they expect it to be published in the next five months.

"The Commission has decided to publish the report. We expect to publish the report this year after discussions with former commissioners and discussions about their recommendations. Definitely, the victims will have the benefit regarding truth with the release of the report".

Former head of the HRCSL Dr. Deepika Udagama who investigated the aftermath of the riots admitted the failure to publish the report is an obstacle to justice.

"We could have given this to external advisers. But, we didn't do that due to its sensitive nature. Amid these issues, this was written and edited once or twice. But, it had several information that had to be presented accurately. In addition, the 2019 bomb blasts happened when the final conclusions and recommendations were being written. Our total focus went there. Another thing is that we can't release such a report in two or three weeks, because every commissioner has to be consulted."

HRCSL Commissioner Gazali Hussain, Director of Investigation and intelligence Nihal Chandrasiri, Attorney A.W.M. Ahmed, Kandy coordinator Kumudini Vithanage, and Legal Officer Pratheepa Weerawickrema assisted the Chairman in the 2018 investigation.

# இவ்வார ராசிபலன்

## 12-07-2024 வெள்ளி தொடக்கம் 18-07-2024 வியாழன் வரையும்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** காரியத்தில் வெற்றிக் காணும் வாரம். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் வலுக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் சேரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நண்பர்களால் நன்மை உண்டு. பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. எதிரிகளின் தொல்லை குறையும். வஸ்திர தானம் செய்தால் வளம் சேர்க்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனஅமைதி சீர் குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகளால் வெகுமானம் உண்டாகும். நட்பில் பிரிவு ஏற்படும். எண்ணங்கள் மாறுப்படும். தன வரவு அதிகரிக்கும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். செல்வாக்கு பெருகும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். புண்ணியம் சேர்க்கும் காலம். முகப்பொலிவு கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுபச்செய்தி வரும். வெளியூர் பயணம் நன்மை தரும். சுயத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1*
*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Q,S





**ரிஷபம்:** மாற்றங்களை சந்திக்கும் வாரம். பிறர்க்கு உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மனைவி வழி அன்பு அதிகரிக்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன்தொல்லை நீங்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். குதூகலமான மனநிலை காணப்படும். வீண் செலவுகள் குறையும். விவேகம் வெளிப்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிடைக்கும். உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். மனோபயம் ஏற்படும். நிர்வாகச் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பதவி உயர்வு கிடைக்கும். கமி'ன் தொழில் லாபம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். கலைத்துறையில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். அலைப்பேசி செய்தி ஆனந்தம் தரும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். விளையாட்டுத் துறையில் வெகுமானம் கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஅய்யனாரப்ப சுவாமி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,3*
*அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* H,Z




**மிதுனம்:** மனநிறைவு கிடைக்கும் வாரம். பூர்வீகச் சொத்து வந்து சேரும். உடல்சோர்வு உண்டாகும். அலுவலக பணியில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் கூடும். எண்ணங்கள் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் அதிகரிக்கும். புதுமைகள் நிறைந்த காலம். இயந்திர பணியில் ஆர்வம் கூடும். புதிய நட்பில் எச்சரிக்கைத் தேவை. சொல்லில் கவனம் தேவை. கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டாகும். இடமாற்றம் ஏற்படும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டுக் கிட்டும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் கசக்கும். அந்நியர் ஆதரவு கிடைக்கும். உறவினர்கள் பகை ஏற்படும். பொறாமைகள் விலகும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகம் உன்னதம் தரும். தாய் வழி உறவு மூலம் லாபம் அதிகரிக்கும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கிடைக்கும். வறுமைகள் அகலும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

*வழிபட வேண்டிய தெய்வம்: குண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,9,1,3*
*அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Y,L




**கடகம்:** விவேகத்தோடு செயல்படும் வாரம். சகோதரியால் லாபம் உண்டு. எதிர்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. நன்மைகள் அதிகரிக்கும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி கூடி வரும். கைப்பொருள் களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய பொருள் சேரும். பழைய கடன் வசூலாகும். பணவரவு அதிகரிக்கும். சாதனை படைக்கும் காலம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் தரும். வறுமைகள் அகலும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உணர்வு உண்டு. சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். இல்லத்தில் அமைதி கூடும். தேக பலம் கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பேச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1*
*அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* V,A




**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. காதல் கைக்கூடும். மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வாயில் தேடி வரன் வரும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். கடன் வாங்க நேரிடும். மன நிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திறமைகள் வெளிப்படும். குடும்ப வளர்ச்சி கூடும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தர்மச் சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பணவரவு அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். பாதகம் விலகும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். வேண்டாத நபர் விலகிடுவர். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருப்புமுனை ஏற்படும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1*
*அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* E,J




**கன்னி:** கன்னி: உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு விலகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு மேம்படும். மனக்கசப்பு நீங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். துணிச்சல் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்த்த தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். உற்சாகம் களைகட்டும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிடைக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரியோர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். வறுமைகள் ஒழியும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,6,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* V,S




**துலாம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும் வாரம். உற்சாகம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். வழக்குகள் முடிவுக்கு வரும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். காதலர்களிடையே கசப்புகள் விலகும். சொத்துப் பிரச்சினைகள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுதலை பெறுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். பொறுப்புக்கள் கூடும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். மாற்று இன உதவி கிட்டும். திருப்புமுனை ஏற்படும். வெற்றிகள் குவியும். மதிப்பு உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. விருந்தினர் வருகை ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எண்ணம் வண்ணமயமாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வளர்ச்சி கூடும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். பொறாமைகள் அதிகரிக்கும். வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். தாய்வழி உறவில் தகராறுகள் குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீசெல்வ நாயகி, அதிர்ஷ்ட எண்: 8,5,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* A,F





**விருச்சிகம்:** எண்ணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கூடும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். சுபவிரயம் ஏற்படும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன்தொல்லைகள் தீரும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். மாற்றங்களை சந்திப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். கொண்டாட்டங்கள் கூடும். திருப்திகள் அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமைமிக்க காலமாக அமையும். மாலை நேரத்தில் மகிழ்வான செய்தி வரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும்.

***(தொடர்ச்சி 22 பக்கம்)***



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1103

## செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில் - மட்டக்களப்பு

செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில் கருவறையிலே எழுந்தருளியுள்ள சிவலிங்கம், நுட்பமான வேலைப்பாடுகளும், பூரணமான அழகிய உருவ அமைப்பும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இரண்டாம் மண்டபத்திலே சொமகலாநாயகியின் திருவுருவமம், விநாயகர் திருவுருவமும் காணப்படுகின்றது. இவற்றொடு சண்டேசுவரர், நந்தி ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் தெற்கு வாயிலைக் கொண்டுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள அம்பாளும் தெற்கு நோக்கிய பார்வையிலேயே எழுந்தருளியுள்ளார். வெளியே வைரவர் ஆலயம் காணப்படுகின்றது. ஆலயத்திற்குரிய தீர்த்தக்கிணறு, மடைப்பள்ளி என்பனவும் அமைக்க்பட்டுள்ளன. வீதியைச்சுற்றி நிழல்தரு மரங்கள் பலவும் நடப்பட்டுள்ளன. இவற்றுள் வில்வமரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இக்கொயிலின் மேற்குப்புறமும், தெற்குப்புறமும் பாதைகளை எல்லைகளாகக் கொண்டுள்ளன. கிழக்கிலும், வடக்கிலும் மக்கள் குடியிருப்புகளாகக் காணப்படுகின்றன.

இக்கோயிலின் வளர்ச்சி ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்லரானந்தகிரி சுவாமிகளோடு பெரிதும் தொடர்புபட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த இச்சுவாமி 1940 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து அழகும், அருளும் கொண்ட சிவலிங்கத்தைத் தருவித்தார். ஆரம்பத்திலே இச்சிவலிங்கம் ஓலையினால் வேய்ந்த கோயிலில் வைத்துப் பூசிக்கப்படடு வந்தது. இச்சிவலிங்கமே இக்கோயில் கருவறையில் எழுந்தருளியுள்ள மூர்த்தியாக விளங்குகின்றது.

ஓலைக்குடிசையில் எழுந்தருளியிருந்த சிவனை கற்கோயிலில் எழந்தருளச் செய்ய வெண்டும் என்பது சுவாமிகளின் பேராவலாகக் காணப்பட்டது. ஆயினும் வருமானம் தரக்கூடிய எவ்வசதியும் இக்கோயிலுக்கு இருக்கவில்லை. இதே எண்ணங்கொண்ட பக்தர்களும் இதனைப் பல்வேறு வழிகளில் செயல்படுத்த முனைந்தனர்.

ஆலய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு சுவாமிகளினால் ஏற்படுத்தப்பட்ட "திருவருள் வாலிபர் சங்கம்", "திருவருள் மாதர் சங்கம்" என்பன அளித்த மாதாந்த சந்தாப்பணம், மற்றும் மாதர் சங்க உறுப்பினர்கள் தமது வீடுகளிலே சமைக்கும்போது ஒவ்வொரு பிடியரிசியாகச் சேமித்து அவற்றை செவ்வாய்க்கிழமைகளில் ஆலயத்திலேசேர்த்து, நியாயவிலைக்குவிற்று பணம் சேகரித்தனர். இப்பணமும் சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல பெருகியது.

சுவாமிகளின் ஆலோசனப்படி செயற்பட்ட பக்தர்களதும், மன்ற உறுப்பினர்களதும் அயராத முயற்சியினாலும், சுவாமிகளின் அருளாசியினாலும், யாவற்றிற்கும் மேலாக இறைவன் திருக்கடாட்சத்தினாலும் கற்கோயில் கட்டும்பணி நிறைவேறியது. 1981 ஆம் ஆண்டு செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வருக்கு அழகிய கற்கோயில் எழுப்பப்பட்டது. இக்கடடிட வேலைகள் அனைத்தும் சிரமதான அடிப்படையிலேயே செய்து முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கட்டி முடிக்கப்பட்ட ஆலயத்திற்கு கும்பாபிஷேகப் பெருவிழா நடத்த முடிவெடுக்கப்பட்டது. அத்தோடு ஆயிரம் நாமம் கொண்ட தெய்வத்திற்கு ஒரு திருநாமம் சூட்ட வேண்டும் எனவும் விரும்பினர். தெற்கு வாயில் கே-ாயில் அருமையாகவே காணப்படுவதுண்டு செட்டிபாளையம் சிவன்கோயிலும் தெற்குவாயிலாகக் காணப்பட்டது. இநியாவிலே கடலருகில் பத்திரகிரி என்னும் இடத்தில், சிவன்கோயில் ஒன்று தெற்கு வாயில் கோயிலாகக் காணப்படுகின்றது.

தெற்குவாயில் கொண்ட பத்திரகிரியில் எழுந்தருளியுள்ள சிவனுக்கு சோமநாதர் என்னும் திருநாமம் வழங்கப்பட்டது. செட்டிபாளையம் ஆலயம் அமைவதற்குக் காரணமாயிருந்த சுவாமியினுடைய பெரும் சோமேஸ்வரானந்தகிரி எனக் காணப்பட்டதால் அவருடைய ஞாபகார்த்தமாகவும் செட்டிபாளையத்தில் எழுந்தருளச் செய்த சிவனுக்கு சோமநாதர் என்ற திருநாமத்தையும், அன்னைக்கு நொமகலாநாயகி என்ற திருப்பெயரையும் சூட்டினர்.

இறைவனுடைய பெயர்களை மக்களுக்குச் சூட்டி மகிழ்வது தொன்று தொட்டுக் காணப்படும் பெரு வழக்காயுள்ளது. இந்நிலையில் சற்று மாற்றத்தை ஏற்படுத்தி ஆலயத்தொண்டு புரிந்ததோடு, ஆலய தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட சுவாமியின் பெயரை இறைவன் திருநாமத்தோடு இணைக்கவேண்டும் என்ற மக்களின் எண்ணம் போற்றத்தக்கது.

*வளரும்...*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் பொறுப்பேற்றார்





மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரால் பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பொறுப்பேற்பு நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரன, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன், மதகுருமார்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## வட இலங்கையின் "மக்கள் தொண்டர்" ஆறு திருமுருகன் அவர்களின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய யாழ்ப்பாண உதயன் பத்திரிகைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்றவரும் இலங்கையில் சைவமும் தமிழும் தளைத்தோங்க உழைத்து வருபவரும். ஆதரவற்ற பிள்ளைகளின் ஒரே தாயாகவும் தந்தையாகவும் திகழ்வபவருமான வட இலங்கையின் "மக்கள் தொண்டர்" ஆறு திருமுருகன் அவர்களின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய யாழ்ப்பாண உதயன் பத்திரிகைக்கும் அதன் உரிமையாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சரவணபவனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஆறுதிருமுருகள் அவர்களின் சட்டத்தரணிகள் தற்போது தங்கள் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

சரவணபவான் அவர்களின் பத்திரிகையான யாழ்ப்பாண உதயன் நிறுவனம் "இழுத்து" மூடப்படாமல் இருக்க அவருக்காக மக்கள் பிரார்த்தனை செய்ய வேண்டும் என அன்பர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.



## வடக்கு கிழக்கு மீனவர்களிற்கான சீனாவின் பொருத்து வீடுகள் இரு மாவட்டங்களிற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளன

சீன அரசினால் இலங்கையின் வடக்கு கிழக்கு மீனவர்களிற்காக வழங்கப்பட்ட 500 பொருத்து வீடுகள் அடங்கிய பெட்டிகள் கன்டேனர்கள் மூலம் சில நாட்களுக்கு முன்னர் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இதில் யாழ்ப்பணத்திற்கு 116 வீடுகளும் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை, கல்முனை ஆகிய ஆறு இடங்களிற்கும் தலா 64 வீடுகள் என்ற அடிப்படையில் இந்த 500 வீடுகளும் கடற்றொழில் அமைச்சினால் பங்கீடு செய்யப்பட்டுள்ளதன.

இவ்வாறு எடுத்து வரப்பட்ட வீடுகள் அனைத்தும் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களின் பொறுப்பில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

## கடந்த 10.07.2024 புதன்கிழமையன்று புங்குடுதீவு மண்ணில், கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தால் ஏற விளையாட்டு போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன



மேற்படி விளையாட்டு போட்டிகளை அங்கு நடத்துவதற்கு புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் பாரிஸ் ஒன்றியம், பிரித்தானியா ஒன்றியம், சுவிஸ் ஒன்றியம், ஜெர்மனி ஒன்றியம் ஆகிய அனைத்து அனைத்து ஒன்றிய நிர்வாகத்தினரும் இவ் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அங்கு நடத்தப்பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டி மரதன் ஓட்டப் போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்றவர்களுக்கு பணப் பரிசுகள் வழங்கப்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டியை நடத்துவதற்கு கனடா வாழ் அன்பர்கள் சிலர் ஆதரவு வழங்கிய பணப்பரிசுகள் வழங்கவும் அனுசரணை வழங்கினார்கள். கனடா சங்கத்தைச் சேர்ந்த தலைவர் செயலாளர் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் என பலர் அங்கு கலந்து சிறப்பித்தது இங்கு குறிப்பிடத்தக்கது









# 300 நாட்கள் கடந்தும் தீர்வில்லை: கிழக்கு பால் பண்ணையாளர்களின் போராட்டம் தொடர்கிறது



- சன்முகநாதன் பார்த்திபன்

கிழக்கு மாகாணத்தில் மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்யும் மக்களை அப்புறப்படுத்தக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கு 10 மாதங்களாகியும் அதிகாரிகள் தீர்வு வழங்காததால் அப்பகுதி பால் பண்ணையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுத்தருமாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் பாற்பண்ணையாளர்களின் போராட்டம் ஜுலை 09 ஆம் திகதி 300 நாட்களை பூர்த்தி செய்த நிலையில், ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட மயிலத்தமடு மாதவனை பால் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன், தமது வாழ்வாதாரம் தற்போது முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் போராட்டம் இல்லாமல் எந்த வெற்றியையும் அடைய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"300 நாட்களுக்குப் பின்னரும், எங்கள் மேய்ச்சல் நிலங்கள் கிடைக்கும் வரை நாங்கள் போராடுவோம்.

தொடர்ந்து போராடினால்தான் பலன் கிடைக்கும். சிங்களக் குடியேற்றங்கள் வருவதற்கு முன் ஒரு நாளைக்கு 6000 லீட்டர் பால் கொடுத்தோம். இப்போது 500 லீட்டர் பால்தான் கிடைக்கிறது. மாடுகள் இறக்கின்றன. வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 100 லீட்டர் பால் கறந்தவர் இன்று ஐந்து லீட்டர் பால்தான் கறக்கின்றார்."

தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பால் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக, உள்ளூர் மத தலைவர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் 300ஆவது நாளில் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

கடந்த வருடம் செப்டெம்பர் 13ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குழுக் கூட்டத்தில் தீர்வை வழங்க முடியாது என மாவட்டச் செயலாளர் கமலாவதி பத்மராஜா தெரிவித்ததை அடுத்து, 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக தமிழ்ப் பாற்பண்ணையாளர்கள் முதன் முதலாகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமது மாடுகளை மேய்ச்சலுக்கு பயன்படுத்திய சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஏக்கர் காணி சிங்கள விவசாயிகளால் பயிர்ச்செய்கைக்காக முதலில் கையகப்படுத்தப்பட்டதாகவும், தாம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளபோதிலும் மேலும் பல ஏக்கர் காணிகளை அவர்கள் கையகப்படுத்தியுள்ளதாகவும் பாற்பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவணை பிரதேசத்தில் அமைந்துள்ள புல் நிலம், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் ஆளுநராக நியமிக்கப்பட்ட, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தினால், சோளம் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் வகையில், குடியேற்றப்பட்ட 150 சிங்களக் குடும்பங்களுக்கும் பிரதேச பால் பண்ணையாளர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்ட 6,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தில், சிங்கள விவசாயிகள் 2,500 ஏக்கர் நிலப்பரப்பை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்துள்ளதாகவும், இது புல் வளரக்கூடிய வளமான பூமியெனவும் பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

300 நாட்கள் தொடர் போராட்டத்தின் போது சிங்கள விவசாயிகள் மேய்ச்சல் நிலங்களில் களைக்கொல்லிகளை வீசியதாலும், மேய்ச்சல் நிலங்களுக்கு தீ வைப்பதாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் உணவின்றி உயிரிழந்துள்ளதாக மயிலத்தமடு, மாதவனை பால் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

"இந்தப் போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 1,075 மாடுகள் உயிரிழந்துள்ளன. சட்டவிரோதமாக குடியேறியவர்களின் ஆயுதங்களால் 375 மாடுகள் பலியாகியுள்ளன. இதுவரை இழப்பீடு எதுவும் கிடைக்கவில்லை."

மேய்ச்சல் நிலத்தில் 160 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 300 பேர் அத்துமீறி வாழ்ந்து வருவதாக அவர் முன்னர் தெரிவித்திருந்தார்.

பாற்பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதாக நாட்டின் தலைவரும் அரச அதிகாரிகளும் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என சீனித்தம்பி நிமலன் குற்றஞ்சாட்டுகின்றார்.

"ஜனாதிபதியும், மகாவலி அபிவிருத்தி அமைச்சரும் சந்தித்து வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாவட்ட செயலாளர் அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்புங்கள் என்கிறார். மொத்த நிலத்தில் 10,000 ஹெக்டேயரை மேய்ச்சலுக்குக் கேட்டிருந்தோம். அதன் பின்னர் குறைந்தது 7,000 ஹெக்டேயரைக் கேட்டோம். ஆனால் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் 3,000 ஹெக்டேயர் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை."

ஜனாதிபதி நீதிமன்றத்திற்கு செல்கிறார்

பால் பண்ணை பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொலிஸாருக்கும் மகாவலி அதிகாரசபை அதிகாரிகளுக்கும், பால் பண்ணையாளர்களின் நிலத்தை அபகரித்து விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களை வெளியேற்ற சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

மயிலத்தமடு - மாதவனையில் மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான அரச காணியில், அத்துமீறி குடியேறியதாகத் தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றில் மகாவலி அதிகார சபையினால் கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அரச அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் எவ்வகையான ஆவணமும், அத்துமீறி குடியேறியவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால், மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறிய 13 பேரையும் வெளியேற்றுமாறு நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

எவ்வாறெனினும் சிங்கள விவசாயிகள் இதுவரை நிலத்தை விட்டு வெளியேறவில்லை என பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)


**விருச்சிகம்:** குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். பெண்களுக்கு பெருமை சேரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. நவகிரஹ அனுகிரஹம் கூடும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெற்றோருக்கு பெருமை சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,8,9,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,G




**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அதிகரிக்கும் வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப்போகும். பணியில் கவனம் தேவை. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர் குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பெருமைகள் கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். மாணவர் திறமைகள் பளிச்சிடும். முக்கிய முடிவுகளில் தெளிவு இருக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும். சிக்கனத்தை கையாள வேண்டும். இசை ஆர்வம் கூடும். உணவுத்தொழில் உயர்வு பெறும். வீண் செலவுகள் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தோதான எண்ணம் உருவாகும். சுறுசுறுப்பு பெருகும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மருத்துவச் செலவு குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். பணமும், பாராட்டும் சேரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இரும்பு தொழில் ஏற்றம் தரும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். ஆரோக்கியம் சீராகும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரத்தில் வேகம் கூடும். கனவுகள் பலிதமாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். பாகப்பிரிவினை ஏற்படும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,N




**மகரம்:** கோரிக்கைகள் நிறைவேறும் வாரம். தர்மச்சிந்தனைகள் மேலோங்கும். வாகன மாற்றம் உண்டு. சகோதர வழியில் சந்தோஷம் கூடும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடவும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். தகுதிகள் மிகுதியாகும். உடல்நலம் மேம்படும். சுபச்செய்திகள் வரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். மனக்குழப்பம் வந்து நீங்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசியல் ஆதாயம் தரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்கள் பாராட்டு கிடைக்கும். பொறுப்புக்கள் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். குடும்ப வளர்ச்சி கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். தொழில் முயற்சி வெற்றி தரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். தனலாபம் கூடும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,G




**கும்பம்:** நிதி நிலைமை திருப்தி தரும் வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகையுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். மெத்தனப் போக்கு விலகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி உயர்வு வரும். மங்களகரமான செய்தி வரும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. மாணவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவா-கும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழி செலவு அதிகரிக்கும். மனோ தைரியம் அதிகரிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும். வழக்குகள் சாதகமாகும். காதல் கை கூடும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். உடல் உபாதை நீங்கும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். பணி செய்யும் இடத்தில் பாராட்டுக் கிட்டும். சாதகமான வாய்ப்பு அமையும். ஊதிய உயர்வு கிட்டும். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீ பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,5,9,3
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,S




**மீனம்:** வாயில் தேடி வாய்ப்பு வரும் வாரம். காரியங்கள் கை கூடி வரும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும். விருந்தினர் வருகை உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். விவேகமான பேச்சுக்களால் வில்லங்கம் விலகும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதல-டுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்பு தும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கோரிக்கைகள் நிறைவேறும். எண்ணங்கள் வண்ணமயமாகும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வரவுகள் திருப்தி தரும். ஆபத்துகள் விலகும். நினைத்த விஷயம் நிறைவேறும். அன்னிய தேச பயணம் உண்டு. காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சொந்த பந்தங்களின் உதவி கிடைக்கும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பாகப்பிரிவினை சுமூகமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
Subramaniam
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages




இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொட்பு கொள்ளவும்.





26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1475 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 12, 2024

# சம்பந்தனின் மரணத்தில் நடக்கும் "அரசியல்"

## சுமந்திரன் – சாணக்கியன் ஆகியோரின் கட்டுப்பாட்டில் தமிழரசுக் கட்சி இயங்கினால் அது வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு "ஆபத்துக்களை" விளைவிக்கும்



"சம்பந்தனின் உயிர் பிரிந்தவுடனேயே சுமந்திரன் அணி சம்பந்தனின் இறுதிக்கிரியை தொடர்பான அனைத்து விடயங்களையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டதால் அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்பது தமிழரசுக்கட்சியினரிலேயே பெருமளவானோருக்கு தெரிந்திருக்கவில்லை. அதேவேளை ஜனாதிபதி, பிரதமர்,அமைச்சர்கள் முதல் வெளிநாடுகளின் தூதுவர்கள் ,இராஜதந்திரிகள் வரை சுமந்திரனுடனும் அவரது வலதுகரமாக இரா.சாணக்கியனுடனுமே தொடர்பு கொண்டவாறு இருந்தனர். சம்பந்தனின் இறுதிக்கிரியைகளில் இறுதிவரை தமிழரசுக்கட்சியின் தலைமை நாமே என்ற கோதாவில் செயற்பட்ட சுமந்திரன் அணி தற்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் பதவியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பார்க்கின்றது"

கே .பாலா (தொடர்ச்சி 10ம் பக்கம்)



# கனடா – கந்தர்மடம் ஒன்றியத்தின் வருடாந்த கோடை கால ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெற்றது

அதிக அங்கத்தவர்களைக் கொண்டு கடந்த பல வருடங்களாக இயங்கிவருகின்ற கனடா-கந்தர்மடம் ஒன்றியத்தின் வருடாந்த கோடை கால ஒன்றுகூடல் அண்மையில் ஸ்காபுறோ தொம்சன் பூங்காவில் **(THOMSON PARK)** சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் மற்றும் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என பலர் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் சகிதம் அங்கு கலந்து கொண்டனர்.
(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# CANADA DAY CELEBRATIONS HOSTED BY SCARBOROUGH AGINCOURT MPP ARIS BABIKIAN

## ஸ்காபுறோ அஜின்கோர்ட் – மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் நடத்திய கனடா தின வைபவம்

ரொறன்ரோ நகரில் வாழும் தமிழ் மக்களின் நெருங்கிய நண்பரும் ஆதரசவாளரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது பிரச்சனைகளுக்காக குரல் கொடுத்து வருப-வருமான ஸ்காபுறோ அஜின்கோர்ட் -மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் நடத்திய கனடா தின வைபவம் கனடா தினமான யுலை 1ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெற்றது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)





# புங்குடுதீவு மண்ணில், கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யபெற்ற விளையாட்டு போட்டிகள்

கடந்த 10.07.2024 புதன்கிழமையன்று புங்குடுதீவு மண்ணில், கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யபெற்ற விளையாட்டு போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

மேற்படி விளையாட்டு போட்டிகளை அங்கு நடத்துவதற்கு புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் பாரிஸ் ஒன்றியம், பிரித்தானி யா ஒன்றியம், சுவிஸ் ஒன்றியம், ஜெர்மனி ஒன்றியம் ஆகிய அனைத்து அனைத்து ஒன்றிய நிர்வாகத்தினரும் இவ் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.
(தொடர்ச்சி 21ம் பக்கம்)

# இந்திய இழுவை மடியின் பாதிப்பால் தாலியை கூட மீள முடியவில்லை – மீனவ சங்கப் பெண் தெரிவிப்பு –



மாதகல் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்படியில் ஈடுபடும் இந்தியா இழுவைமடித் தொழிலாளர்களினால் ஏற்பட்ட இழப்பீட்டை நிவர்த்தி செய்வதற்கு எனது தாலியை அடகு வைத்தும் மீள முடியவில்லை என வலிகாமம் தென்மேற்கு கடற்தொழிலாளர் சமாசத்தின் பொருளாளர் பெனடிக் நிர்மலா தெரிவித்தார். 11-07-2024 வியாழக்கிழமை மாதகல் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
(தொடர்ச்சி 9ம் பக்கம்)